பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 26 புதன்கிழமை (11-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:288

## வடக்கு - கிழக்கு பாதுகாப்பு நிலைமை:

# அகற்றப்பட்ட 120 முகாம்கள்

# 300 யார் தூரத்தில் மீளமைப்பு

## பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு,செப்ரெம்பர்11

**வடக்கு - கிழக்கில் பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றிலிருந்து அகற்றப்பட்ட இராணுவ முகாம்கள் அந்த இடங்களிலிருந்து 300 யார் தூரத்துக்குள் மீள அமைக்கப்பட்டிருக்கின்றன என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுத் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்த அவர், வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள், நிலைகள் அகற்றப்படவில்லை. அவை பொருத்தமான இடங்களில் முன்னரைப் போலவே அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் பொறுப்புடன் கூறமுடியும். - எனவும் சொன்னார்.

ஜே.வி.பி. உறுப்பினர்களான விமல் வீரவன்ச, சுனில் ஹந்துன்ஹெட்டி ஆகியோர் எழுப்பிய வாய்மூல கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பாதுகாப்பு அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் 486 இராணுவ முகாம்கள் உள்ளன. அவற்றில் 61 முகாம்கள் பொது இடங்களில் இருந்தன. பொது இடங்களில் இருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

### செப்ரெம்பர் 11 பேரழிவின் நினைவு நாள்

நியூயோர்க்,செப்.11

அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார இராணுவ மையங்கள் மீது பெருத்த எடுப்பில் நடத்தப்பட்ட பேரழிவுத் தாக்குதலின் முதலாவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

கடந்த ஆண்டு இதே நாள் உலக வர்த்தக மையமாகிய இரட்டைக் கோபுரங்கள் மீதும் உயர் பாதுகாப்புத் தளமான பென்டகன் மீதும் விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 3 ஆயிரத்து 500இற்கு மேற்பட்டோர் பலியாகினர்.

இந்தத் தாக்குதலின் நினைவு நாளை அமெரிக்கர்கள் இன்று அனுஷ்டிக்கின்றனர். அமெரிக்காவின் முக்கிய மையங்கள் தீவிர பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.(ஐ-12)



கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் ராஜுவின் வித்துடல் பேழை நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்த காட்சி. *(மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)*

### மதிநுட்பம் மிக்க பீரங்கிப் படையணி மூலம்

# இயக்கத்தின் போர்த் திறனுக்கு வலுச்சேர்த்தவர் கேணல் ராஜு

### அஞ்சலி நிகழ்வில் அவருக்குப் புகழாரம்

யாழ்ப்பாணம்,செப்.11

இலங்கை அரசைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு கேணல் ராஜுவும் ஒரு காரணகர்த்தாவாக இருந்துள்ளார். அவரினால் அமைக்கப்பட்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் மதிநுட்பம் மிக்க தாக்குதல் திறனினால் முகங்கொடுக்க முடியாத அரசபடைகள் பேச்சுக்கு முன்வந்தன.

- இவ்வாறு நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலுக்கு கேணல் ராஜுவினுடைய பங்களிப்பு முக்கியமானது. அவரது மதிநுட்பம் மிக்க - இராணுவரீதியான - நடவடிக்கைகள் எமது இயக்கத்தைப் போர்வலுப் பெறச் செய்தது.

தேசியத்தலைவரின் நேரடி வழிநடத்தலின்கீழ் வளர்ந்த கேணல் ராஜுவை இன்று நாம் போர் ஓய்ந்து சமாதானமான முறையில், எமது பிரச்சினைகள் அணுகப்படும் வேளையில் இழந்துள்ளோம். இது உண்மையில் எமக்கு ஒரு பாரிய இழப்புத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தடைநீக்கத்துக்கு எதிராக ஜனாதிபதி சட்டநடவடிக்கை

கொழும்பு,செப்.11

அரசு புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கியதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார் என அறியப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று பண்டாரவளை நகர மண்டபத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதி அங்கு மேலும் கூறியிருப்பதாவது:-

நான் கலந்துகொள்ளாத சந்தர்ப்பத்திலேயே அரசு புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும் யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருக்கிறது.

எவ்வாறெனினும், புலிகள் இயக்கத் தடையை நீக்கி, அரசு அங்கீகரித்த

(12ஆம் பக்கம் பார்க்க)

# கேணல் ராஜுவுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம்,செப்.11

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் ராஜுவின் வித்துடல் பேழைக்கு குடாநாட்டு மக்கள் நேற்று உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

முகமாலை ஊடாக எடுத்துவரப்பட்ட பேழை கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட விசேட பந்தல்களில் வைக்கப்பட்டபோது பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும், மாணவர்களும் கூடி அஞ்சலி செலுத்தினர். அங்கு வீரவணக்கக் கூட்டங்களும் இடம்பெற்றன.

பேழை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட வீதிகளில் மக்கள் கூடி நின்று மலர்தூவி தமது அஞ்சலியைச் செலுத்தியதைக் காணக்கூடிய

(12ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணி எம்.பிக்கள் இருபது பேர் 19ஆவது திருத்தத்தை ஆதரிப்பர்

### ரிச்சர்ட் பத்திரன அறிவிப்பு

கொழும்பு,செப்.11

19ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்க பொ.ஐ.முன்னணியின் இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக உள்ளனர்.

பொ.ஐ.முன்னணியின் எம்.பியான ரிச்சர்ட் பத்திரன இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளுக்கு நான் ஒத்துழைப்பு வழங்கவுள்ளேன். இதற்காக 19ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிப்பேன்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கப்போவதாக பொ.ஐ.முன்னணிதான்

(12ஆம் பக்கம் பார்க்க)

# 'சண்டே லீடர்' ஆசிரியருக்கு பத்து லட்ச ரூபா நஷ்டஈடு!

கொழும்பு,செப்.11

'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவிற்கு 10 லட்சம் ரூபா வழங்குவதற்கு 'லேக்ஹவுஸ்' நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது.

1999ஆம் ஆண்டு ஒகஸ்ட்மாதம் 18ஆம் திகதி 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்று தனக்கு அவதூறு விளைவித்துள்ளது என கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் லசந்த விக்கிரமதுங்க மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் எதிர் மனுதாரராக 'லேக்ஹவுஸ்' நிறுவனத்தினதும் 'டெய்லி நியூஸ்' பத்திரிகை நிறுவனத்தின் முன்னாள் ஆசிரியரான ஜெப் விஜயசிங்கவினதும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாவட்ட நீதிபதி அபேய குணரட்ன முன்னிலையில் நேற்று இந்த மனு விசாரணைக்கு வந்த போது

(12ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் இம்தியாஸ் இன்று வருகை

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்ப்பாணத்துக்கான விஜயம் மேற்கொண்டு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இன்று இங்கு வருகை தரவுள்ளார்.

இன்று காலை வருகைதரும் அமைச்சர், ரெலிக்கொம் நிறுவனத்தின் புதிய மேலதிக தொலைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தெஹிவளையில் தமிழ் வர்த்தகர் குத்திக் கொலை!

கொழும்பு,செப்.11

தெஹிவளைப்பகுதியில் நேற்று முன்தினமிரவு கேடீஎஸ்வர தமிழ் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் கொலை செய்யப்பட்டார். 55 வயதுடைய முத்துலிங்கம் என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார். இவர் நல்லூரைச் சேர்ந்தவர். சில காலம் ஆஸ்திரேலியாவில் தங்கியிருந்தார். அண்மையில் இலங்கைக்குத் திரும்பிய இவர் யாழ்ப்பாணம்

(12ஆம் பக்கம் பார்க்க)

### இராமேஸ்வரத்தில் 16அகதிகள் கைது!

இராமேஸ்வரம்,செப்.11

இலங்கைக்கு சட்டவிரோதமாகப் படகில் பயணம் செய்யவிருந்த அகதிகள் சிலர் தமிழ்நாடு கரையோரக் காவல் பொலஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இராமேஸ்வரத்தின் தென்பகுதியில் உள்ள ஸ்ரீமாரியம்மன் கோயில் அருகே கடந்த திங்களன்று இரவு இந்த அகதிகள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பயணம் செய்யவிருந்த படகும் கைப்பற்றப்பட்டது.

கரையோரக் காவலில் ஈடுபட்டிருந்த பொலீஸார் கரையில் பதுங்கியிருந்த சிலரைப் பிடித்து விசாரணை

(12ஆம் பக்கம் பார்க்க)

### பலகல்லவின் பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு,செப்.11

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் (வயது 57) பதவிக்காலம் அடுத்த ஆண்டு இறுதிவரை- பதினைந்து மாதங்களுக்கு - நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான உத்தரவை நேற்று விடுத்தார். (ஐ)

### பொலீஸ்மா அதிபராக ஆனந்தராஜா

கொழும்பு,செப்.11

புதிய பொலீஸ்மா அதிபராக ரி.ஈ.ஆனந்தராஜா நியமிக்கப்படுகின்றார்.

இப்பதவிக்கு அவரின் பெயரைக் குறிப்பிட்டு அரசமைப்புக் கவுன்சிலுக்கு சிபார்சு செய்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பதவிக்கு பிரியானி விஜேயசேகராவை அவர் நியமித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

### மிருசுவில் ஆஸ்பத்திரி அருகே புதிய படைமுகாம்

யாழ்ப்பாணம்,செப்.11

யுத்தத்தால் சீரழிந்த சாவகச்சேரியின் மிருசுவில் பகுதியில் ஆஸ்பத்திரிக்கு அருகில் இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆஸ்பத்திரியின் வடக்கு, தெற்கு எல்லைகளிற்கு இடையில் - ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளைச் சுவீகரித்து - இந்த முகாம் அமைக்கப்படுவதாகக்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மண்ணின் மைந்தனுக்கு மகத்தான இறுதி அஞ்சலி......






கேணல் ராஜுவின் வித்துடல் நேற்று ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட போதும் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த சமயமும் எடுக்கப்பட்ட படங்கள்.

*(படங்கள்:தேவராஜன்)*






# உயர் பாதுகாப்பு வலயங்களில் படைநிலைகள் மாற்றப்படமாட்டா!

## இராணுவத் தரப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் எக்காரணம் கொண்டும் நகர்த்தப்படமாட்டா என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

யாழ். நகரில் உள்ள 512 ஆவது படையணி அலுவலகத்தில் படைத்தரப்பினர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் இடையில் நேற்று நடந்த கலந்துரையாடலின்போதே இத்தகவல் வெளியிடப்பட்டது.

யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி சரத் பொன்சேகா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் மற்றும் யாழ்ப்பாணம், தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய கல்வி வலயங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றுக்கு மாணவர்கள் எவ்வித பிரச்சினையும் இன்றிச் சென்றுவரலாம். அதற்குப் படையினர் எவ்வித தடைகளும் விதிக்கமாட்டார்கள்.

★ மாணவர்களுடன் நல்லுறவைப் பேணவே படையினர் விரும்புகின்றனர். அண்மையில் நடந்த வேண்டத்தகாத சம்பவத்தின்போதும் படையினர் எவ்வித பிரச்சினைகளிலும் ஈடுபடாது நல்லபடியே நடந்துகொண்டனர்.

★ யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து பொது நூலகத்திற்குச் செல்லும் வீதி விரைவில் மக்கள் போக்குவரத்துக்கெனத் திறந்துவிடப்படும்.

★ குடாநாட்டில் ஐயாயிரம் பனை விதைகளும், நான்காயிரம் தென்னை நாற்றுகளும் மீள்நடுகை செய்யப்படும்.

★ இனிவரும் காலங்களில் படையினரின் தேவைகளுக்கு பனை மரங்கள் தறிக்கப்படமாட்டா. தென் பகுதியிலிருந்து காட்டுமரங்களும், சிலிப்பர் கட்டைகளும் படையினரின் தேவைகளுக்காக எடுத்துவரப்படும்.

★ சமாதானப் பேச்சுகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே மக்களின் அபிலாசைகள் தீர்த்துவைக்கப்படும். பாடசாலைச் சுற்றாடல்களில் உள்ள படையினரும் இதன் அடிப்படையிலேயே வெளியேறுவார்கள்.

★ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளமையால் சீருடையுடன் மாணவர்கள் செல்லவும், மாணவர்களுடன் அவர்களது பெற்றோர்கள் செல்லவும் தடையில்லை. ஏனையோர் செல்வதற்குக் கட்டுப்பாடுகள் இருக்கும். (ஐ-10)

## பாரதி விழா

யாழ்ப்பாண கல்லூரியினால் நடத்தப்படும் மகாகவி பாரதி விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் அருண்மொழி பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார்.

பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் ஆசியுரை வழங்கவுள்ள இந்நிகழ்வில் விசேட நிகழ்ச்சியாக "மகாகவி பாரதியின் தனிப்பெரும் புகழுக்கு பெரிதும் துணை நிற்பது, தேசிய உணர்வா? இறையுணர்வா? சீர்திருத்த உணர்வா?" என்ற தலைப்புக்களிலான பட்டிமன்றம் இடம்பெறும். (ஒ-ரி)

# முக்கிய கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.குடாநாட்டில் இயங்கும் சகலதுறை சார்ந்த ஒப்பந்த வேலைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் தனியார் கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல்கள் நாளை வியாழக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்திலுள்ள யாழ். தேசிய கூட்டுறவுச் சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

ஒப்பந்த வேலைகளில் ஈடுபடுவோருக்கு காலை 10 மணிக்கும் -

கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கும் -

கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலுக்கு வருகை தரும் கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்கள் மூலப்பொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களின் தற்போதைய விலை, விவரங்கள், உற்பத்திச் செலவு போன்ற விவரங்களுடன் வருகைதரவேண்டுமென யாழ். வர்த்தக கைத்தொழில் மன்றம் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதாகவும் - சம்பந்தப்பட்டவர்கள் தவறாது இக்கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளும்படியும் அறிவிக்கப்பட்டது. (ஒ-9)

☆ ☆ ☆

தென்மராட்சி பிரதேசத்தில் தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சி அரசியல் துறை பணிமனையில் நடைபெறுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் அறிவித்துள்ளார். (ஒ-117)

☆ ☆ ☆

வலி.வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் தியாகி திலீபனின் 15ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கலந்துரையாடலில் வலி.வடக்கு, தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பொது அமைப்புகள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பொறுப்பாளர்களையும் கலந்துகொள்ளும்படி செயலாளர் இ.சாம்பசிவம் வேண்டியுள்ளார். (ஒ-9-86-117)

# யூனியன் கல்லூரி நேற்று சொந்த இடத்தில் ஆரம்பம்

## ஆசிரியர்கள், மாணவர்கள் குதூகலம்

யாழ்ப்பாணம்,செப்.11

பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நேற்றுமுதல் தெல்லிப்பழையில் உள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது.

நேற்றுக்காலை 9 மணிக்கு வைபவரீதியாக நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொண்டு கல்லூரிக் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரியைப் பார்வையிட்டனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சொந்தப் பாடசாலைக்குச் சென்றதால் மாணவர்கள் அனைவரும் குதூகலமாகக் காணப்பட்டனர்.

வலி.வடக்குப் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல், தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி எஸ்.மங்கையர்க்கரசி ஆகியோரும் திறப்புவிழாவில் கலந்துகொண்டனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக 1990 ஆம் ஆண்டில் இருந்து இக்கல்லூரி இடம்பெயர்ந்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8-86)

# அடுத்த யுகத்தில்

தொழில் நுட்பத்தில் உலகில் முன்னணி வகிக்கும் நாடு ஜப்பான். அடுத்த தொழில் நுட்ப யுகத்துக்கு ஏற்றவாறு தனது மக்களைத் தயார்ப்படுத்த இப்போதே ஆரம்பித்துவிட்டது.

இதற்கமைய தனது நாட்டுப் பிரஜைகளுக்கு பெயருக்குப் பதில் ஒன்பது இலக்கங்களைக் கொண்ட குறியீட்டு எண்களை ஜப்பானிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இனிமேல் பெயர்களுக்குப் பதில் இந்த எண்களே பயன்பாட்டில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் வாங்கும் இலத்திரனியல் பொருள்களின் பின்புறத்தில் பதியப்பட்டிருக்குமே ஒன்பது இலகக எண்கள். அதனைப் போன்ற எண்கள்தான் இனி ஜப்பானியர்களின் குறியீட்டுப் பெயர்களாகும்.

அரசின் இந்தத் திட்டத்துக்கு ஜப்பானில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ஆனால், அதனைப் பொருட்படுத்தாமல் அவரவர்களுக்கு உரிய எண்களை அனுப்பும் பணியை ஜப்பானிய அரசு ஆரம்பித்துள்ளது.

இனி ஜப்பானியர்களின் பெயர் இப்படித்தான்.

ஆமாம், இந்த மாதிரிப் போனால காதல் கடிதங்கள் எல்லாம் எப்படி எழுதுவார்கள். "என் அன்பே 070016700:....." இந்த மாதிரித் தான் ஆரம்பிக்குமோ?

# துணி 'கீ போட்'

கணனிகள் இன்றி இனி இயக்கம் இல்லை எனும் அளவுக்கு அதன் பாவனை விரிவடைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் இப்போது கணனிப் பாவனை அதிகரித்து வருகின்றது. நகரில் ஆங்காங்கே கணனிகள் விற்பனைக் கடைகள் புதிதாக முளைத்துள்ளன. கூடவே கணனிக் கற்கைக்கான கல்லூரிகளும் புற்றீசல்களாக ஆரம்பிக்கப்படுகின்றன.



பாவனை அதிகரிக்க அதிகரிக்க கணனிகள் அளவில் சுருங்கிக் கொண்டே போயின. கையடக்க கணனிகள் ஐரோப்பிய நாடுகளில் 'லேட்டஸ்' ஆனால், இந்தக் கணனிகளுக்கான விசைப் பலகைகளை (கீ-வதில்தான் சிக்கல்கள் இருந்தன. விசைப் உருவாக்கினால் அதனைப் பயன்படுத்துவது கையடக்க கணனிகளுக்கு பெரிய விசைப் வதும் பொருத்தமாயில்லை.

இந்த நடைமுறைச் சிக்கல் நிறுவனம் ஒன்று சுருட்டி மடக்கி செல்லக்கூடிய துணிபோன்ற யுள்ளது.

சிறிய அளவாகிச் தான் இப்போது கையடக்க் க போட்) உருவாக்கு பலகையை சிறியதாக கடினம் அதேசமயம் பலகைகளைப் பொருத்து

களைத் தீர்க்க அமெரிக்க கணனி எப்படி வேண்டுமானாலும் எடுத்துச் நவீன விசைப்பலகையை உருவாக்கி

விசேட பிளாஸ்ரிக் கலவையினால் இந்த விசைப் பலகை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆய்வு நிலையில் இருக்கும் இவற்றின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருக்கின்றன. விரைவிலேயே அவை சந்தைக்கு வந்துவிடும்.

# அட! அப்படியா!!

## இதுவும் போட்டிதான்

தயாரிப்பு: கனிமொழி

சீச்சீ... என்ன இது விவஸ்தையே இல்லாமல் என்று நீங்கள் இந்தப் படத்தைப் பார்த்து எண்ணக்கூடாது. இது போட்டி அவ்வளவுதான்! கொஞ்சம் சுவாரஸியமானது. அதாவது மிக நீண்ட நேரம் தொடர்சியாக முத்தமிடும் போட்டியொன்று அண்மையில் சீனாவில் இடம்பெற்றது.



சீனாவின் பிரபல வர்த்தக வளாகம் ஒன்று இந்தப் போட்டியை நடத்தியது. உலகெங்கும் இருந்து வந்த நூற்றுக்கணக்கான ஜோடிகள் இதில் கலந்துகொண்டனர்.

வெற்றிபெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில் கலந்து கொண்ட ஜோடி ஒன்று முத்தமிட்டுக் கொண்டிருப்பதையும் நடுவர்கள் மிக அவதானமாகப் போட்டியை ரசித்துக் கொண்டிருப்பதையும் தான் படத்தில் காண்கிறீர்கள்.

## சைக்கிள் சாகசம்

சைக்கிள்களின் நகரம் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தில் ஆளாளுக்கு வீதிகளில் சாகசம் காட்டுவது (சில வேளைகளில் இருவர் மூவராக வீதியின் குறுக்கே மறித்தபடிகூட) ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் இது உண்மையிலேயே சைக்கிள் சாகசம் புரியும் வீரர்கள் பற்றிய ஒரு தகவல். சைக்கிள் சாகசங்கள் நடப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம் அல்லது பார்த்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் வாரக்கணக்கில் மாதக்கணக்கில் என்று சைக்கிளில் இருந்து இறங்காமல் சுற்றிச் சுற்றி வருவதும் குளியல், சாப்பாடு எல்லாமே சைக்கிளில் இருந்தபடி நடப்பதும் இந்த சாகசங்களில் ஒருவகை. காலப்போக்கில் இத்தகைய சாகசங்கள் மறைந்து வருகின்றன. இது நவீன காலம் என்பதால் சைக்கிளில் சாகசமும் புதுவடிவம் பெற்றுள்ளது. சிறிய சைக்கிளில் பயணம் செய்தபடி சாகசம் செய்யும் கலைஞர்கள் சீனா போன்ற நாடுகளில் அதிகரித்து வருகின்றனர். கரடு முரடான பாதையிலும் மலைப்பாறையிலும், சகதியிலும் செல்லும் தன்மை கொண்டதாக இந்தக் குட்டி சைக்கிள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.



இந்த சைக்கிள் தொடர்பாக ஆண்டுதோறும் ஒரு பெரிய போட்டியே நடக்கிறது 'எக்ஸ்பீ கேம்ஸ் என்ற பெயரில் அழைக்கப்பட்டும் சைக்கிள் சாகசத்தின் இந்த ஆண்டுக்கான போட்டி சமீபத்தில் சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் நடைபெற்றது. இதில் பல வேறு நாட்டுக் கலைஞர்கள் கலந்துகொண்டு சைக்கிள் சாகசத்தை வெளிப்படுத்தினார்கள். இவர்களில் சீனாவைச் சேர்ந்த ஹாங் டெங்பீ 93.25 புள்ளிகள் எடுத்து முதல் பரிசு பெற்றார்.

# மனிதனுக்கும் காகத்துக்கும் தொடர்பா?

உலகில் உள்ள உயிரினங்களில் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய அறிவுள்ள இனம் மனித இனம் என்பது தெரிந்ததே. மிருகங்களில் சிம்பன்ஸி குரங்குகள் ஓரளவுக்கு சிந்தித்துச் செயலாற்றக்கூடிய அடிப்படை அறிவைக்கொண்டுள்ளன. சாதாரண குரங்குகள் அவற்றைவிட சற்றுக்குறைந்த அறிவை உடையவை. நாய், பூனை போன்ற சில மிருகங்கள் கற்றுக் கொடுப்பவற்றைச் செய்யக்கூடியனவான அறிவைக் கொண்டிருக்கின்றன. இவை தொடர்பாக விஞ்ஞானிகள் பல ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

ஆனால், பறவைகளிடத்தில் தன்னிச்சையாகச் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய அறிவு உள்ளதா என்பது இதுவரை கேள்விக்குரியதாகவே இருந்து வந்தது. தற்போது அதற்கான விடை கிடைத்துள்ளது.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பறவைகள் மற்றும விலங்குகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை நடத்திவரும் 'பிகேவியரியல் எகோலஜி ரிசேர்ச் குரூப்' (Behaviourial Ecology Research Group) ஆய்வின்மூலம் இந்த உண்மை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறுவயதில் பாட்டி வடைசுட்ட கதை கேள்விப்பட்டு இருக்கிறோம். அதில் வரும் காகம் பாட்டியின் வடையை எடுத்துச் சென்று புகழ்ச்சிக்கு மயங்கி வடையை நரியிடம் பறிகொடுத்தது என்பது ஒரு கதை. பின்னாளில் அந்தக் காகத்தின் அறிவு வளர்ந்து அதனைப் புகழ்ந்து பாடக் கேட்ட நரிக்கு வடையைத் தன் கால்களில் வைத்துக்கொண்டு பாட்டுப் பாடிக் காட்டியதாகவும் பின்னர் ஒரு கதை உலாவியது.

இதுதவிர மற்றொரு கதையும் உண்டு. புத்திசாலிக் காகம் ஒன்று பானையின் அடியில் இருந்த அந்த நீரை அருந்துவதற்காக அருகில் இருந்த சிறிய கற்களை எல்லாம் பானைக்குள் போட்டு, நீர்மட்டம் மேலே உயர்ந்ததும் அதனை அருந்தி விட்டுப் பறந்துபோனது என்பதுதான் அந்தக் கதை.

என்னடா இது ஆரம்பத்தில் எதையோ சொல்லிவிட்டு இடையில் வந்து பாலர்வகுப்புக் கதைகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கின்றனே என்று நினைக்கிறீர்களா? அப்படியெல்லாம் நினைக்காதீர்கள்!



இந்த பாலர் வகுப்புக் கதைகள் எல்லாம் காகத்தின் புத்திசாலித்தனம் குறித்து எந்த அடிப்படையில் உருவானது என்று தெரியாது. ஆனால், இங்கிலாந்து விஞ்ஞானிகள் காகங்கள் உண்மையிலேயே புத்திசாலித்தனமானவை என்று நிரூபித்திருக்கின்றார்கள். தன்னிச்சையாகச் சிந்தித்துச் செயற்படும் அறிவு காகங்களுக்கு இருக்கின்றது என்கின்றார்கள் அவர்கள்.

இதற்காக அவர்கள் நடத்திய ஆய்வு இதுதான்:

'அபெல்'(பெண் காகம்) 'பெட்டீ' (ஆண் காகம்) என்ற பெயரிடப்பட்ட இரு காகங்களை இந்த ஆய்வுக்கு விஞ்ஞானிகள் பயன்படுத்தினார்கள்.

ஓர் உயரமான கண்ணாடிக் குடுவைக்குள் சிறிய வாளி போன்ற ஒரு பொருளில் உணவுப் பொருள்களை வைத்தனர் விஞ்ஞானிகள். அதன் அருகில் நீளமான, வளையும் தன்மை கொண்ட கம்பி ஒன்றும் வைக்கப்பட்டது. பின்னர் அவை இருந்த அறைக்குள் காகங்கள் இரண்டும் விடப்பட்டன.

அறைக்குள் விட்டதும் இரு காகங்களும் அந்தக் கண்ணாடிக் குடுவையைச் சுற்றி கா... கா... என்று கத்தியபடி சுற்றிச் சுற்றிப் பறந்தன. அதற்குள் உள்ள உணவுப் பொருளை எடுப்பதற்கு அந்தரித்தன.

சிறிது நேரத்தின் பின்னர் தனது பறப்பு முயற்சியைக் கைவிட்டு குடுவையருகில் தரையிறங்கியது 'அபெல்' (பெண் காகம்). குடுவையருகிலிருந்த கம்பியை எடுத்து அதன்மூலம் குடுவையிலுள்ள உணவுப் பொருள் இருந்த வாளியை வெளியே எடுக்க முயன்றது அது. ஆனால், அதனால் நேரான அந்தக் கம்பியை வைத்துக் கொண்டு உணவுப் பொருள் இருந்த வாளியை வெளியே எடுக்க முடியவில்லை.

சிறிது நேரம் போராடிய அபெல் பின்னர் ஒரு புத்திசாலித்தனமான காரியம் செய்தது. நேராக இருந்த அந்தக் கம்பியின் முனையை தனது அலகால் சற்று வளைத்தது. பின்னர் அதனைக் குடுவைக்குள் செலுத்தி உணவுப் பொருள் இருந்த வாளியை வெளியே எடுத்தது.

உணவுப் பொருள் வாளியை அபெல் வெளியே எடுக்கும்வரை ஆண் காகமான பெட்டீ அறையைச் சுற்றிச் சுற்றி பறந்து அபெலுக்கு அருகே எதுவும் நெருங்காது காவல் காத்தது.

அபெல் உணவுப் பொருளை வெளியே எடுத்ததும் அதனருகே சென்று பெட்டீ அதனைக் கொத்துவதுபோன்று பாசாங்கு செய்து அங்கிருந்து விரட்டிவிட்டது. பின்னர் அந்த உணவுப் பொருளை தானே உண்ண ஆரம்பித்தது.(சரியான ஆண் புத்தி பாருங்கள்)

இதன் பின்னரும் பல தடவைகள் விஞ்ஞானிகள் இந்தச் சோதனையை நடத்தினர். அனைத்திலும் அபெல் புத்திசாலித்தனமாகவே நடந்துகொண்டது.

அபெல், பெட்டீ ஆகிய இந்தக் காகங்களின் செயற்பாடுகள் விஞ்ஞானிகளுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

"பறவைகளின் புத்திசாலித்தனம் எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. சிம்பன்சி குரங்குகளும் பிற பறவைகளும் குச்சிகள், கம்புகளை பயன்படுத்தும் அறிவை பெற்றுள்ளன. ஆனால், அதை வளைக்கவும் அந்த வளையத்தின்மூலம் உணவுப் பொருளைப் பயன்படுத்தும் திறமை பறவைகளுக்கு குறிப்பாக காகங்களுக்கு இருப்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. கருவிகளை உருவாக்குதல் அவற்றை தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்துதல் போன்றவை உயர்தர புத்திசாலித்தனமாகக் கருதப்படுகின்றது. இது மனித இனத்தில் மட்டுமே காணப்படுவது" என்று இந்த ஆய்வை நடத்திய குழுத் தலைவரான பேராசிரியர் அலெக்ஸ் காசல்னிக் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கண்டுபிடிப்பால் ஒருவேளை மனித இனத்துக்கும் காகங்களுக்கும் தொடர்பு இருக்குமோ என்ற ரீதியிலும் விஞ்ஞானிகள் தற்போது சிந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

பிரேம்

மனிதனின் மூதாதையர்களுக்கும் குரங்குகளின் மூதாதையர்களுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்புகள் இருக்கலாம் என்றே இதுவரை கருதப்பட்டுவந்தது. ஆனால், "காகங்களின் சிந்தனைத் திறனைப் பார்க்கும்போது அவற்றுக்கும் மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கும் நிறைய ஒற்றுமை இருக்கலாம் என்றே தோன்றுகின்றது" - இப்படி கூறுகிறார் காசல்னிக்.

காகங்கள் டைனோசர்களின் ஒரு வகையிலிருந்து பரிணாம வளர்ச்சி மூலம் வந்தவை என்ற ஒருவித கருத்தும் விஞ்ஞானிகள் மத்தியில் உண்டு. அப்படியானால் மனிதன்....? எல்லாவற்றுக்கும் இனிவரும் காலங்களில் நடக்கும் ஆராய்ச்சிகளில் இருந்து விடை கிடைக்கலாம்.

# சொலெக்ஸ் ஒப்ரிக்கல் & லக்ஷறி டென்ரல் வேக்ஸ்

உங்கள் கண்களைப் பரிசோதித்து அதற்குத் தகுந்த வகையில் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பிறேம் வகைகளினால் தயாரிக்கப்பட்ட கண்ணாடிகளையும், சண் கிளாஸ், மாபிள் கண் வகைகளையும் பெற்றுக்கொள்ளவும்.

மேலும் உங்கள் முக அமைப்புக்கேற்ப சங்குப் பற்களைக கட்டிக்கொள்ளவும் மிதப்புப் பற்களுக்குக் கிளிப் செய்து குறுகிய காலப்பகுதிக்குள் சீர்செய்துகொள்ளவும்

*நாடுங்கள்:*

**சொலெக்ஸ் & லக்ஷறி**

**மூக்குக் கண்ணாடியகம் பல்கட்டும் நிலையம்**

*232/A, கண்டி வீதி,*
*(பிரதேச செயலகம் முன்பாக),*
*சாவகச்சேரி.*

(C/23752)



உ

சாமி சரணம் ஐயப்பா!

# மஹா கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு சபரீஸ ஐயப்பனுக்கு இன்று (11.09.2002) புதன்கிழமை காலை 6.31 மணி தொடக்கம் 7.31 மணிவரையிலான சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

*அடியார்கள் அனைவரும் வருக!*

*ஐயப்பன் திருவருள் பெறுக!!*

ஆலய பிரதமகுரு
பிரம்மஸ்ரீ கி.ஹரிஹரசுத சர்மா

(8100)


## நாய் குறித்து வளர்ப்போரிடம் உறுதிமொழி

தென்மராட்சி செப்.11

யாழ்.பிராந்திய உள்ளூராட்சிப் பிரதேசங்களில் வளர்ப்பு நாய்களுக்கான சான்றுப்பத்திரம் வழங்கும்போது அந்த நாய்கள் பற்றிய விவரங்களையும், உறுதிமொழியையும் நாய் வளர்ப்போரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களால் பொது மக்கள் பலரும் கடிக்கு இலக்காவது உட்பட பல சிரமங்களை எதிர்நோக்குவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

## கட்டாக்காலி நாய்கள் இன்று அழிப்பு

தென்மராட்சி,செப்.11

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உபஅலுவலக எல்லைக்குட்பட்ட வேம்பிராய், மந்துவில், மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலியாக அலையும் நாய்கள் இன்று புதன்கிழமை நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளது.

இப்பகுதியில் வசிப்போர் தமது வளர்ப்பு நாய்களை இன்று கட்டி வைக்குமாறு சரசாலைப் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சிவநேசகுமார் அறிவித்துள்ளார். (ஒ-117)


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 02 - 1976



உதிர்வு 11 - 09 - 1998

# செல்வன் புஸ்பநாதன் றமணன்

ஆண்டுகள் நான்கு ஆனாலும் என்ன
எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை
உன் நினைவுகள் இருக்கும் றமணா!
*உன் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*இந்துக் கல்லூரி வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(8082)

துயர்பகிரும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.



# மரண அறிவித்தல்

## கதிரவேலு சபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் விசுவமடு 48/1, விலாசத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் கதிரவேலு சபாபதி அவர்கள் 09.09.2002 திங்கட்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கைலாயம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்புச் சகோதரனும் செல்லம்மா, பொன்னம்மா, குகதாசன் (ஆசிரியர்), கோபாலசிங்கம் (அமெரிக்கா), பரமேஸ்வரன் (கோட்டக்கல்வி அதிகாரி, முல்லைத்தீவு), குகனேஸ்வரன் (கனடா), கலாவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதாசிவம் (விசுவமடு), காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் நிர்மலா, சாந்தி (அமெரிக்கா), பாரதி (ஆசிரியர்), நந்தினி (கனடா), கீர்த்திசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிதம்பரநாயகி, பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனரும் கமலாதேவி (கனடா), திருச்செந்தூர்நாதன் (சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்), சூரியகலா (சிறுப்பிட்டி) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*48/1, விசுவமடு கிழக்கு,*
*முல்லைத்தீவு.*

(8150)

தகவல்:
க.சதாசிவம் (மருமகன்).





சாமியே சரணம் ஐயப்பா!

# பிரதம குருவின் அருளாசி!

கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பனுக்கு மஹாகும்பாபிஷேகம் செய்வதில் நான் அகமிக மகிழ்வு அடைகிறேன். இந்தியாவில் கேரள நாடு சென்று 18 படி ஏறி வழிபட முடியாத யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் இது. இந்தத் தெய்வீகத் திருப்பணியை நிறைவேற்றிய பெருமை **தேவஸ்தான பிரதமகுரு (குருசுவாமி) கி.ஹரிஹரசுத சர்மா** அவர்களையே சாரும். யாழ்நகரில் எந்த இடத்திலும் இல்லாத 18 படிகளோடு கூடிய மலையில் சாஸ்தா ஆலயம் அமைத்து எங்கள் வம்சகுல தெய்வமான தர்ம சாஸ்தாவைப் பிரதிஷ்டை செய்து அடியார்கள் நலமே வாழ, வம்சங்கள் தழைக்க, நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைக்க கருணா மூர்த்தியான சாஸ்தாவை வேண்டி அருளாசி கூறி அமைகின்றேன்.

**பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்**
**சிவாகம கிரியா தத்துவநிதி, சாங்கீத சாகரன்,**
**சிவன்கோயில், இணுவில்.**

(8099)


# உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை

# அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில்

# மஹா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

11-09-2002

## ஆலய பிரதிஷ்டா குரு அருளாசியுரை




"அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிகவரம் பெறலாம்"

உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை திருப்பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற அன்னை ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகத்தை நடத்துபவர்களும் திருப்பணியிலீடுபட்ட அன்பர்களும், உபயகாரர்களும் தேவஸ்தான பரிபாலன சபையினரும் அம்பிகையின் திருவருட் பிரசாதத்தைப் பெற்று நூற்றாண்டுகள் வாழ மனம், வாக்கு, காயம் இம்மூன்றினாலும் திரிகரணசுத்தியுடன் எனது நிறைவான அருளாசியினை வழங்குகின்றேன்.

**- சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக்குருக்கள்.**

## தர்மகர்த்தா சபைத் தலைவர் வாழ்த்துகிறார்



"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

எங்கள் வாழ்வும் வளமும் அம்பிகையின் அருளாணையின் கீழே நடைபெறுகின்றன. இந்த நம்பிக்கை எமது நாட்டுச் சைவ மக்கள் ஒவ்வொருவரிடமும் உண்டு. ஆலயங்களைத் திருத்தி திருக்குடமுழுக்கு அதனைக் கண்டு தரிசிப்பவர்களும் எய்தும் பேறு சொல்லும் தன்மையதன்று. இப்புண்ணிய கைங்கரியத்தை எண்ணியாங்கு நிறைவேற்றுவதற்குத் திண்ணியர்களாக இருந்து தம் நல்உழைப்பினை நல்கிய புண்ணிய சீலர்களுக்கு அன்னை மனோன்மணி அம்பாளின் ஆசி என்றும் உண்டு. இத்திருப்பணியாளர்களை மனநிறைவோடு வாழ்த்துகின்றேன்.

**- திரு.சி.நராசிவம்.**


### கும்பாபிஷேகப் பெருவிழா வானொலியில் நேரடி அஞ்சல்

இன்று நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்ச்சிகள் காலை 6.30மணிமுதல் 8.30 மணிவரை இலங்கை வானொலி யாழ்.சேவையில் நேரடியாக அஞ்சல் செய்யப்படும்.

*கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:*
கொம்மந்தறை இளைஞர்கள்,
இலண்டன் வாழ் கொம்மந்தறை இளைஞர்கள்.



### கன்னியே மனோன்மணிக் கற்பகம் போற்றி



இமயத்தமர்ந்த
இறைவன் பாக
உமையே பார்வதி உத்தமி போற்றி
சொல்லும் பொருளும் சுரப்பாய் போற்றி
அல்லல் தீர்க்கும் அழகியே போற்றி
அருவுரு வாகிய ஆத்தாள் போற்றி
திருவருள் பொழியும் சிலையே போற்றி
சிங்கத்தமர்ந்த தேவியே போற்றி
செங்கமலாசனத் திருவே போற்றி
தண்கலை வழங்கும் சரஸ்வதி போற்றி
எண்குண நாயகி ஈஸ்வரி போற்றி
தத்துவாதீத சாம்பவி போற்றி
நித்தியானந்த நிரஞ்சனி போற்றி
தொண்டரைக் காக்கும் சோதியே போற்றி
மண்டபம் நிறைந்த மகேஸ்வரி போற்றி
கன்னியே மனோன்மணிக் கற்பகமே போற்றி
என்னிதயத்தில் இருப்பாய் போற்றி

**- கவியோகி அருட்கவி**
**சீ.விநாசித்தம்பிப் புலவர்.**

### குடநீராட்டு காணும் தாயே! குவலயம் சிறக்க அருள்வாய்



குளமொடு, களனிகள் சூழ்ந்த திருப்பதியாம்
கொம்மந்தறை உறைந்தருள் புரிகின்ற தாயே!
வளமெலாம் சுரந்தளித் தெமைக் காக்கின்ற
வடமராட்சி மேவிடும் மனோன்மணித் தாயே!
நிலமிது தமிழர் தாயகமாய் நிறைவுடன் பொலிந்து
நிரந்தர தீர்விங்கே மலர்ந்திட வேண்டுமம்மா
உளமெலாம் உன்னை நிறைத்து வாழ்கின்றோம்
உரிமைகள் தந்தெம்மைக் காத்திட வேண்டுமம்மா

அலைபாயும் கடல் போன்ற மனதினிலே
அமைதியினை தந்தருள வேண்டுமம்மா
கலை யாவும் பயின்று கவிதைபல செய்திடவே
கருணை வரமருள வேண்டுமம்மா
நிலையாத வாழ்வினிலே நிலைக்கின்ற புகழ்பெறவே
நின்பாதம் நித்தம் பற்றி வேண்டுமம்மா
மலை போன்ற சோதனைகள் மாயமாய் மறைந்திட
மனோன்மணித் தாயே மாண்புகள் சேர்த்திடம்மா

*- கவிமாமணி மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்*

### கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்ச்சிகள்

- காலை 06.28 மணிமுதல் 07.16 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்
  *மாலை நிகழ்வுகள்:-* விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரி
- உடுப்பிட்டி L.S. பாலேந்திரன் குழுவினர்
  உடுப்பிட்டி L.S. ஞானேந்திரன் குழுவினர்
  பருத்தித்துறை விஜயகுமார் குழுவினர்
- அழகிய பூந்தண்டிகையில் அம்பாளின் திருவீதியுலா திருக்காட்சி இடம்பெறும்.
- *சிறப்புப் பேருரை:-* "தமிழர் கலாசாரம்"
  *வழங்குபவர்:-* கவிமாமணி மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
- *பட்டிமன்றம்:-* இந்தப் பண்பாட்டை பெரிதும் பேணிப் போற்றுபவர்கள் ஆண்களா? பெண்களா?
  *நடுவர்:-* சைவப்புலவர் கந்த.சத்தியதாசன்
  *(மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு)*
- *பாட்டுக்கு பாட்டு:* பின்னணி இசை, ராகம்ஸ் இன்னிசைக்குழு
- *இன்னிசைக் கானங்கள்:* வழங்குபவர் - ராகம்ஸ் இன்னிசைக்குழுவினர்.

(C/23765)

உதயன்

## வரலாறு காணாத சமாதானப் பேரணி

மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். சமாதானம் மலர்ந்து நிலைபெறவேண்டும் என்று குரலெழுப்புகிறார்கள். சமாதானத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராகவிருக்கிறார்கள்.

இவற்றின் வெளிப்பாடுதான் நேற்றுமுன்தினம் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற சமாதானப் பேரணியும் பொதுக்கூட்டமும்.

வடக்கு - கிழக்கு, மலையகம், தென்னிலங்கை பகுதிகள் எங்கும் இருந்த மக்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி லட்சக்கணக்கில் கொழும்புக்கு வந்திருந்தனர்.

சமீபகால வரலாற்றில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் வந்து கொழும்பை ஜனசமுத்திரம் ஆகக் காட்சியளிக்கச் செய்தது கிடையாது; இதுதான் முதன்முறை. நாட்டு மக்கள் ஒன்றுதிரண்டு தமது சமாதான வேட்கையை புலப்படுத்தினார்கள். சமாதான முயற்சிகளை விரும்பாமல் அவற்றைக் குழப்புவதில் ஈடுபட்ட சிலர், இப்போது யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டிருப்பார்கள்.

சமாதானப் பேரணியை அரசாங்கத் தரப்பே ஏற்பாடு செய்திருந்தது. என்றாலும் அதில் அரசியல் கலப்பு சிறிதும் இருக்கவில்லை. அது ஒரு தனிச்சிறப்பு.

பேரணியில் மத குருமார், வர்த்தகர்கள் மற்றும் சாதாரண பொதுமக்களோடு மாறுபட்ட அரசியல் கருத்துக்களை உடையவர்களும், தொழிற்சங்கவாதிகளும் கூடச் சென்றார்கள்.

சமாதானம் வேண்டுமென்ற சுலோகத்தை விட வேறு எந்தச் சுலோகத்தையும் அவர்கள் ஒலிக்கவில்லை. பதாகைகளும் கூட சமாதானம் பற்றியவைதான். அந்த அளவுக்கு சமாதான அர்ப்பணிப்புடன் அசம்பாவிதம் எதுவுமின்றி அமைதியாகவும் அதேவேளை, உணர்ச்சிபூர்வமாகவும் பேரணி நடந்தது.

இதைக்கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மக்கள் சமாதானத்தை விரும்பவில்லை என்று கூற இப்பொழுது யாராவது துணிவார்களா? என்று கேள்வியெழுப்பினார்.

"சமாதானத்திற்காக முன்வைத்த காலை இனிப் பின்வைக்கமாட்டோம்; எங்கிருந்து எத்தனை இடைஞ்சல்கள் எப்படி வந்தாலும் அவற்றையெல்லாம் வெற்றிகொண்டு சமாதானத்தை அடைந்தே தீருவோம்." - என்று பிரதமர் சூளுரைத்தார்.

"யுத்தத்தாலும் பொருளாதாரச் சீரழிவாலும் பட்ட கஸ்ரம் எல்லாம் போதும். இனியும் அந்த நிலை வேண்டாம். புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவோம்.

யுத்தம், நாட்டுப் பிரிவினை என்று இவ்வளவு காலமும் இருந்த புலிகள் இப்போது சமாதானம், அதிகாரப் பகிர்வு என்று வருகிறார்கள். இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடலாமா? அவர்களுடன் தாய்லாந்தில் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவிருக்கின்றோம்.

முந்திய பேச்சுக்கள் தோற்றுப் போனதைச் சிலர் சுட்டிக்காட்டுகின்றார்கள். அவை தோற்றத்திற்கு பல காரணங்கள். இனிமேல் அந்தக் காரணங்கள் எழாத வண்ணம் பார்த்துக்கொண்டு பேச்சில் ஈடுபட்டால் வெற்றிபெறலாம்.

"புலிகளின் இன்றைய நடவடிக்கைகள் அவர்கள் மேல் நம்பிக்கை வைக்கச் செய்வனவாகவுள்ளன. புலிகளும் அரசாங்கத்தை நம்புகின்றார்கள்" இப்படிப் பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டார்.

பிரதமர் கூறியதுபோல அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நம்பிக்கை இருக்குமானால் பேச்சு பயனளிக்கும் வாய்ப்பு நிறையவே உண்டு.

முன்னைய அரசு புலிகளை அறவே நம்பவில்லை. புலிகளும் அந்த அரசை சிறிதும் நம்பவில்லை. அதனாலேயே இரு தரப்பினருக்கும் இடையே நடந்த பேச்சுக்கள் முறிந்தன.

இப்போது நிலைமை வேறாகிவிட்டது. தவிரவும் மக்கள் சமாதானம் வேண்டுமென்று விடாப்பிடியாக நிற்கின்றார்கள். சர்வதேச சமூகமும் சமாதானம் ஏற்படுத்துமாறு அரசுக்கும் புலிகளுக்கும் அழுத்தம் கொடுக்கிறது.

அழுக்கு மனம் படைத்த சிலரின் புழுக்கம் சமாதானம் ஏற்படுவதற்கு இனிக் குறுக்கே நிற்க முடியாது. நியாயம் கேட்பதற்கு மக்கள் ஒன்று திரண்டு வீதிக்கு வரத் தொடங்கிவிட்டார்கள்.




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிமனை கொக்குவிலில் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. பணிமனையை யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி ஈகச்சுடரேற்றுவதையும், பணிமனைப் பெயர்ப் பலகையையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வசந்தன்)*

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கட்டட பணிக்கு ரூ.80லட்சம் நிதியுதவி

யாழ்ப்பாணம்,செப்.11

நேற்றுமுதல் சொந்த இடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு 80 லட்சம் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இதற்கமைய இக்கட்டடம் அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நேற்று யூனியன் கல்லூரிக்கு 'நிக்கொட்'இன் திட்டப்பணிப்பாளர் எம்.லங்காநேசன் தலைமையில் விஜயம் செய்த மேற்படி குழுவினர் கல்லூரியைப் பார்வையிட்டனர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும், ஆய்வு கூடம் ஒன்றை அமைப்பதற்கும் வேண்டிய முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரி அதிபரிடம் அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஜி.ரி.இசற் நிறுவன அதிகாரிகள் குழுவொன்றும் பாடசாலையைப் பார்வையிட்டது. பாடசாலை மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடனேயே இவர்கள் அங்கு விஜயம் செய்ததாகக் கூறப்பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன், கட்டடங்களும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## பாக்கு நீரிணையில் பாலம்: 50கோடி டொலர் தேவை

### நிபுணர்குழு தெரிவிப்பு

புதுடில்லி,செப்.11

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நீரிணை ஊடாக தரைவழிப் பாதை ஒன்றை அமைப்பதற்கு 50கோடி டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் அமைப்பது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள, இரு நாடுகளைச் சேர்ந்த பொறியியல் நிபுணர்களே இந்த மதிப்பீட்டை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்திய அரசுகள் பாலம் அமைக்கும் திட்டத்தை செயற்படுத்தினால், இதற்கான நிதித் தேவையை முன்னிட்டு தனியார் துறையினரின் ஒத்துழைப்பையும் நாட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை நிலவுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நிதி நெருக்கடியை சமாளிக்க பாலம் கட்டப்பட்ட பின்னர் அதனூடாகப் பயணிப்போரிடம் குறிப்பிட்ட காலத்துக்கு கட்டணம் அறவிடலாமெனவும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

## பயிற்சிபெற்ற டாக்டர் இன்மையால் இரத்தம் சேமிக்க முடியவில்லை!

### பருத்தித்துறை ஆஸ்பத்திரி நிலைமை

கரவெட்டி,செப்.11

பருத்தித்துறை அரசினர் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்தைப் பெற்று சேமிக்க முடியாதிருப்பதற்கு பயிற்றப்பட்ட வைத்தியர் மற்றும் தாதிகள் இன்மையே காரணம் என இலங்கை மத்திய இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

மேற்படி காரணமாகவே பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கென இரத்த வங்கிக் கட்டடம் மற்றும் சாதன வசதிகள் ஆகியன உள்ளன. ஆயினும், பயிற்றப்படாத உத்தியோத்தர்கள் செயற்பாட்டால் இரத்தம் கொடுப்பவருக்கும் ஆபத்துக்கள் ஏற்படலாம். ஆகவேதான் இரத்தம் சேமிக்கும் பைகள் (பக்கற்) உட்பட அது சம்பந்தமான இதர வசதிகள் அவ்வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலைக்கு பலர் இலவசமாக இரத்ததானம் செய்ய முன்வந்தபோது அவற்றைப் பொறுப்பேற்று எடுக்க முடியாது திருப்பி அனுப்பப்பட்டு வருவது தொடர்பாகக் கூறிய போதே ஆதார வைத்தியசாலை பொறுப்பாளர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

மேலும் சம்பந்தப்பட்ட வைத்தியசாலை நோயாளர்களுக்கு இரத்தம் தேவையேற்படின் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-70)

## வாகனப்பதிவு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,செப்.11

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான பணிகளையொட்டி வாகனப் பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் நடைபெற்றுமுடிந்த பின்னர் அல்லது தேர்தல் பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டால் அதன் பின்னர் மீண்டும் பதிவுகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை விநியோகிக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (ஒ-10)

### நாளை

ஆவணி 27
வியாழக்கிழமை
(12.09.2002)
திதி : ஷஷ்டி
முன்இரவு 7.46 வரை
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 12.55 வரை.
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.33 - 03.03
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கௌரவத்தைப் பெற்றிருப்பதைவிட, அதனைப்பெற உண்மையாகத் தகுதி பெற்றிருப்பது மேலானதாகும்.

## சாவகச்சேரியில் நீதிமன்றம் அடுத்த மாதம் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம்,செப்.11

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் அடுத்த மாதத்தில் இருந்து மீண்டும் சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கவுள்ளது.

இந்த நீதிமன்றுக்கென புதிய நீதிபதி ஒருவர் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படவுள்ளார். கடந்தவார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பி.டபிள்யூ.டி.சி.ஜெயதிலகா இதனைத் தம்மிடம் தெரிவித்ததாக யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் இயங்கவுள்ள கட்டடத்தையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை செயலாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையை அடுத்து சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறையில் செயற்பட்டு வருவதும் -

முன்பு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானாகக் கடமையாற்றி வந்த அ.பிரேம்சங்கர் தற்பொழுது பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிவானாகக் கடமையாற்றி வருவதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ-10)

## யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று ஆரம்பமாகவுள்ள யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் கண்காட்சியில் முதன்முதல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்களும் தமது ஆக்கங்களை முன்வைத்துள்ளனர்.

மாணவர் மத்தியில் அறிவியலை வளர்க்கும்நோக்கோடு இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கண்காட்சி ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஞானக்குமரன் தெரிவித்தார். வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், தொல்லியல் ஆய்வாளருமான கலாநிதி ப.புஸ்பரட்ணம் கடந்த பத்து வருட ஆய்வின்மூலம் சேகரித்த புராதன நாணயங்களை இக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்கின்றார்.

பாடசாலை மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இக்கண்காட்சி அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

## கால்நடை நோய் ஆராய்ச்சிக்கு யாழ்ப்பாணத்தில் நிலையம்

அச்சுவேலி,செப்.11

யாழ்ப்பாணத்தில் கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படவுள்ளது. நோய் ஆராய்ச்சி நிலையத்தின் பயன்பாட்டிற்கென பல லட்சம் ரூபா பெறுமதியான சாதனங்கள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

திருநெல்வேலியில் உள்ள செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையம் செயற்படவுள்ளது.

1985ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் யாழ்.பண்ணையில் கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையம் செயற்பட்டது. இராணுவ நடவடிக்கைகளினால் அந்த ஆராய்ச்சி நிலையக் கட்டடம் சேதமடைந்ததையடுத்து, அதன் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

யாழ்ப்பாணத்தில் கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையம் செயற்படாமையினால் யாழ்.மாவட்டத்தில் கால்நடை நோய்கள் தொடர்பான பிரச்சினைகள், சந்தேகங்கள் ஏற்படும்போது பேராதனையில் உள்ள நோய் ஆராய்ச்சி நிலையத்திற்கு மாதிரிகள் அனுப்பப்பட்டு அங்கிருந்து கிடைக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்தியர்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் யாழ்.மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர்.

திருநெல்வேலியில் செயற்படவுள்ள இக்கால்நடை நோய் ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாடுகள் கூடியவிரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக யாழ்.மாவட்ட கால்நடை வைத்தியத்துறை உயர் அதிகாரி தெரிவித்தார். (ஒ-11)

# யாழ்.பிரதம தபாலகம் விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும்

## அஞ்சல் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்.பிரதம தபாலகம் முன்னர் அமைந்திருந்த யாழ்கோட்டைப் பகுதியில் தற்பொழுது அமைக்கப்பட்டு வருகின்ற தபாலகக் கட்டடத் தொகுதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட 80 லட்சம் ரூபா நிதியின்மூலம் இக்கட்டடத் தொகுதியின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும்-

விரைவில் வேலைகள் பூர்த்தியடைந்ததும் டிசெம்பர் மாதம் இது திறந்து வைக்கப்படும் எனவும் - அவர் தெரிவித்தார்.

தற்போது தனித்தனியாக வெவ்வேறு தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்ற பிரதம தபாலகம், அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், நிர்வாக அஞ்சல் அலுவலகம் மற்றும் கணக்காளர் அலுவலகம் ஆகியவை புதிய கட்டடத்தொகுதியில் செயற்படவுள்ளன.

தற்பொழுது இயங்கி வருகின்ற தனியார் கட்டடங்களுக்கு வருடந்தோறும் பெருந்தொகையான பணத்தை வாடகையாகச் செலுத்தி வருவதாகவும் -

சொந்தக் கட்டடத் தொகுதியில் இவையாவும் இயங்கத் தொடங்கினால் வாடகையாகச் செலுத்தும் பணத்தை மீதப்படுத்த முடியும் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 - 05 - 1936

மறைவு 23 - 08 - 2001

### அமரர் தம்பையா நாகராசா

திதி: 11-09-2002

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வளமாக வாழ்ந்து - எமைவிட்டு
வானகம் ஏகிவிட்டீர்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மனைவி: அன்னலட்சுமி,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

14, பாரதி லேன், கச்சேரியடி.

(8112)



# இலக்க மாற்றம்

# யாழ்நகர் மற்றும் பருத்தித்துறை

இன்றுமுதல் யாழ்நகரில் புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையமொன்று இயக்க ஆரம்பம் செய்யப்படுமென்பதை ஸ்ரீலங்கா ரெலிகொம் பொதுமக்களுக்கு அறிவிக்க விரும்புகிறது. இந்த இயக்க ஆரம்பத்துடன் யாழ்நகர் மற்றும் பருத்தித்துறை பரிவர்த்தனை நிலையங்களில் ஆரம்பித்து புதிய தேசியமட்ட 10 இலக்க ஒழுங்கமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படும்.

இன்றுமுதல் யாழ்நகர் மற்றும் பருத்தித்துறை தொலைபேசி இலக்கங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்படும். பிராந்திய குறியீட்டிலக்கமான 021 மாற்றம் பெறாது.

| பரிவர்த்தனை நிலையம் | தற்போதைய இலக்கம் | | புதிய இலக்கம் | |
|---|---|---|---|---|
| | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல. (4 இலக்கங்கள்) | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல. (7 இலக்கங்கள்) |
| யாழ்நகர் | 021 | 2xxx | 021 | 2222xxx |
| | 021 | 3xxx | 021 | 2223xxx |
| | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல. (5 இலக்கங்கள்) | பிராந்திய குறியீடு | வாடிக்கையாளர் இல. (7 இலக்கங்கள்) |
| பருத்தித்துறை | 021 | 63xxx | 021 | 2263xxx |

உதாரணம்

| யாழ்நகர் பிராந்தியம் | |
|---|---|
| தற்போதைய இலக்கம் | புதிய இலக்கம் |
| 2240 | 222 2240 |
| 3240 | 222 3240 |


| பருத்தித்துறை | |
|---|---|
| தற்போதைய இலக்கம் | புதிய இலக்கம் |
| 63240 | 226 3240 |

இலக்கமாற்றம் பற்றிய சகல விசாரணைகளும் யாழ். பிராந்திய ஸ்ரீலங்கா ரெலிகொம் காரியாலய உத்தியோகத்தர்களால் 021- 2222240/ 021-2222231 என்ற இலக்கங்களில் அல்லது கொழும்பு காரியாலய 161 எனும் இலக்கத்தில் கவனிக்கப்படும். இந்த மாற்றங்கள் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை இட்டு ஸ்ரீலங்கா ரெலிகொம் வருந்துகிறது. (சி-23678)

Sri Lanka Telecom

www.slt.lk






அறிமுகமாகிறது

SLT PASSPORT

முன்கூட்டியே பணம் செலுத்திய அட்டை

வரையறையற்ற உரையாடல் தொடர்புகளுக்கு

SLT பாஸ்போர்ட் என்பது ஸ்ரீலங்கா ரெலிகொம் வழங்கும் முன்கூட்டியே பணம் செலுத்தப்பட்ட அட்டை ஆகும். நீங்கள் இலங்கையின் எந்த இடத்திலிருந்தும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அழைப்புக்களை எடுக்க இது உதவும்.

அதுமட்டுமல்ல. நீங்கள் SLT பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தி பிரான்ஸ், ஜப்பான், பிரிட்டன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்தும் இலங்கைக்கு அழைப்பு எடுக்க முடியும்.

அட்டைகளை தற்சமயம் ரூ. 250, ரூ. 500, ரூ750, ரூ. 1,000, ரூ. 3,000 ஆகிய பெறுமதிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

சகல ரெலிஷொப்களிலும் கிடைக்கும்
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள் 01-555555.

ஸ்ரீ லங்கா ரெலிகொம்

தாமே சமாதானத்தின் மூலவர் என்ற

# இலங்கைப் படையினரின் பிதற்றல் அவர்கள் செயலிழப்பதைக் காட்டுகிறது!

## ஐக்கிய சோசலிச கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.11

**தமிழீழ விடுதலைப் புலிகளே இன்றைய சமாதானச் சூழலுக்கு காரணம் என்பதை மறுத்து, தாங்களே சமாதானத்தின் மூலவர்கள் என்று சிங்கள இராணுவம் பிதற்றுவது அவர் கள் வேகமாகச் செயலிழந்து வருவ தையே காட்டுகிறது.**

**இவ்வாறு ஐக்கிய சோசலிசக் கட்சியின் யாழ்.மாவட்டச் செயலர் தேவதாசன் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வடமராட்சியில் பொதுமக்களும் மற்றும் மாணவர்களும் இணைந்து அண்மையில் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது. அந்த அறிக்கையைக் கண்டித்து ஐக்கிய சோசலிசக் கட்சி விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

"ஆர்ப்பாட்டம் செய்தால் ஆபத்தில் முடியும்; அவதானமாயிருங்கள்!" என்று தமிழ்த் தேசிய மக்களை அச்சுறுத்தும் பாணியில் அறிக்கையொன்றை யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பின் அடையாளச் சின்னங்களாக விளங்கும் சிங்கள இராணுவத்தின் காவலரண்கள்மீது இன்னொரு தடவை யாராவது கைவைத்தால் மீண்டும் யுத்தம் வெடிக்கும், தமிழினம் முழுமையாக அழிந்தொழிய நேரிடும் என்றவாறு பயமுறுத்தும் சிங்கள இராணுவத்தின 'அரசியல் ஆதிக்கம்' இவ்வறிக்கை மூலம் அப்பட்டமாக அம்பலமாகியுள்ளது. யாருடைய தாயகத்தில், யார் வந்து, யாரை எச்சரிக்கின்றார்கள்? வரலாற்றைத் திரிவுபடுத்தி விடுக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையை ஐக்கிய சோசலிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

அந்நியநாட்டு இராணுவங்களிடமிருந்து தமிழர் தாயகத்தைப் பாதுகாப்பது எப்படி என்பது தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு நன்றாகவே தெரியும். 1987 - 90 காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதைச் செய்தும் காட்டியிருக்கிறார்கள். சிங்கள இராணுவம் இதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. தமிழர் தாயகத்தைவிட்டுச் சிங்கள இராணுவம் முழுமையாக வெளியேற வேண்டும். இதுவே இன்று படையினர் செய்யவேண்டிய உடனடி வேலை. இலங்கையின் இறைமைபற்றி ஒருபுறம் பேசுவதும், மறுபுறம் அமெரிக்க இராணுவத்தை துணைக்கு அழைப்பதும் சிங்கள இராணுவமேயன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் அல்ல என்பதை யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் முதலில் புரிந்து கொள்ளட்டும்!

தமிழ்மக்களுக்கோ, தமிழினத்துக்கோ எதிராகத் தாம் ஒருபொழுதும் யுத்தம் செய்ததில்லை என இந்த இராணுவ அறிக்கை கூறுகின்றது. இதற்கான சரியான பதிலை டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப்பெருமாள் போன்றோர் இவ்வளவு காலமும் இந்த இராணுவ அதிகாரிகளுக்கு ஏன் தெரிவிக்கவில்லை. இவர்கள் ஆயுதம் ஏந்தியது இதே சிங்கள இராணுவத்தை எதிர்த்துத்தானே! தமக்கெதிராக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் அனைவரும் மனநோய் பிடித்தவர்களே என்று வாதிட்டு, தமிழினத்துக்குத் தம்மால் இழைக்கப்பட்ட அநீதி, அநியாயம், அட்டூழியம், அராஜகம் மற்றும் அரச பயங்கரவாதம் என்றெல்லாவற்றையும் மறைத்துத் தப்பிக்க முயல்கின்றது சிங்கள இராணுவம்.

பேச்சுமூலம் சமாதானத்தையடைவதற்கான இன்றைய சூழல் தம்மால் தரப்பட்ட பிச்சை என்பதுபோலச் சிங்கள இராணுவம் பிதற்ற ஆரம்பித்திருக்கின்றது. இராணுவச் சமநிலையை அடைந்துநிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தமே இன்றைய சமாதானச் சூழலுக்கு உண்மையான காரணம் என்பதை உலகம் இன்று அங்கீகரித்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சிறந்த இராஜதந்திர நடவடிக்கையை அங்கீகரிக்க மறுத்துச் சிங்கள இராணுவம் திணறுவதும், தாமே சமாதானத்தின் மூலவர்கள் என்று பிதற்றுவதும் அவர்கள் வேகமாகச் செயலிழந்து செல்வதையே துலாம்பரமாகி எடுத்துக்காட்டுகின்றது.

பேச்சுக்கு முன்னர் தம்மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடிவாதம் காரணமாக அத்தடையை அரசு இன்று நீக்கியுள்ளது. பிரச்சினையைப் பேசித்தீர்க்கும் பாதையில் இது மிகச் சரியானதோர் ஆரம்பம்.

இவ்வேளையில், தமிழ்த் தேசியத்தின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் ஏற்கும் தென்னிலங்கைச் சக்திகளோடு தமிழ்த் தேசியம் இணைந்து பொதுப் போராட்டங்களை நடத்த வேண்டும். தென்னிலங்கை வீதிகளில் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும். ஏகாதிபத்தியக் கழுகுகளிடம் சிக்காமல் தமிழ்த் தேசம் பிறப்பெடுக்க நம்பிக்கை உத்தரவாதமிக்க ஒரே வழி இதுவே!

அதேவேளை, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது விதிக்கப்பட்ட தடையை உடனடியாக நீக்குமாறு கோரி அந்நாட்டு நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டால் நிச்சயம் வெற்றியீட்டமுடியும். தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள அல்லர் என்பதையும், விடுதலையை வேண்டிநிற்கும் தமிழ்த் தேசியத்தின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதையும் சட்டரீதியாக ஒத்துக்கொள்வதாகவே ஸ்ரீலங்கா அரசின் தடைநீக்கப் பிரகடனம் அர்த்தப்படுத்துகின்றது என்பதே உண்மை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### உறவை வலுப்படுத்த பயணத்திட்டம்

இலங்கைக்கும் நெதர்லாந்துக்குமிடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் முகமாக இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதரகம் சிறுவர் பயணத்திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரமளா ஞானேந்திரன்(தமிழ்), மட்டக்களப்பைச் சேர்ந்த ஆன் றொமென்சியா(பறங்கியர்), பாத்திமா யஸ்மின்((முஸ்லிம்), கொழும்பைச் சேர்ந்த தர்ம கீர்த்தி திலங்க பெரேரா(சிங்களம்) ஆகிய நால்வரும் நெதர்லாந்தில் ஒரு மாதகால சுற்றுப் பயணம் மேற்கொள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் நெதர்லாந்து அரசின் விசேட விருந்தாளிகளாக ஒரு மாதகாலத்திற்கு அந்த நாட்டில் தங்கிவிட்டு நாடு திரும்புவார்களென தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

### விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.11

நேற்றுமுன்தினம் யாழ். கோயில் வீதியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகம் முன்பாக நிகழ்ந்த ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

குழந்தை யேசு வீதியைச் சேர்ந்த கந்தையா யோகநாதன்(வயது 39) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஒ-ரி-15)

## அனுமதியற்ற 'ஜூஸ் பக்கெற்றுக்கள்' மானிப்பாய்ப் பகுதியில் அழிப்பு

சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறாது தயாரித்து விற்பனை செய்யப்பட்ட ஏராளமான ஜூஸ் பக்கெற்றுக்கள் மானிப்பாய்ப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

குடாநாட்டில் வாந்திபேதி நோய் பரவி வருவதைத் தொடர்ந்து மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள உணவுச் சாலைகள், உணவுப் பொருள்கள் உற்பத்திச் சாலைகள் என்பவற்றில் கடந்த வாரம் தீவிர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனையின்போது ஆனைக்கோட்டை, மானிப்பாய், நாவலி பகுதிகளிலுள்ள பல வர்த்தக நிலையங்களில் அனுமதி பெறாது தயாரித்து விற்பனை செய்யப்பட்ட ஜூஸ் பக்கெற்றுக்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

ஜூஸ் தயாரித்து விற்பனை செய்பவர்கள் பிரதேச சபையூடாக அனுமதிக்கு விண்ணப்பித்த பின்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையின் அனுமதிபெற்ற பின்பே அவற்றைத் தயாரித்து விற்பனை செய்ய வேண்டுமென மேற்படி பரிசோதனையிலீடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களகூட்டாக அறிவுறுத்தியுள்ளனர்.

(ஒ-100)



நீண்டகாலமாக யாழ். ப.நோ.கூ. சங்கத்தில் பொதுமுகாமையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற மு.சிவப்பிரகாசத்தை பாராட்டிக் கௌரவிக்கும் சேவை நலன் பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பொதுமுகாமையாளர் மு.சிப்பிரகாசம் உரையாற்றுவதையும் அருகில் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் இயக்குநர் களான எஸ்.ரீ.கணநாதன், சபா.தியாகராஜா, அலெக்ஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

(படம்: அரியாலைச் செய்தியாளர்)

## புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு மின்வசதி ஏற்படுத்தித்தருக!

### உலக வங்கிக் குழுவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.11

தெல்லிப்பழையில் உள்ள புற்றுநோய் வைத்தியசாலை மீண்டும் செயறபட வசதியாக அதற்கான கட்டடத்துக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்த உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவிடம் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 9மணியளவில் யாழ்.செயலகத்தில் பதில் அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அதில் கலந்துகொண்ட பிரதிநிதிகளால் இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

குடாநாட்டில் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய செயற்றிட்டங்கள் மற்றும் கிராமிய மட்டத்திலான வேலைத்திட்டங்கள் பற்றிய விவரங்களை அறிவதற்காக வருகை தந்த உலக வங்கியின் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலின் போது அவைபற்றிக் கேட்டறிந்து கொண்டனர். குடாநாட்டில் உள்ள பல கிராமிய வைத்தியசாலைகளுக்கு மின்சார வசதிகள் இல்லாத காரணத்தினால் அற்றுக்கு 'சூரிய மின்கலங்கள்' வழங்கும்படியும் -

அத்துடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி மற்றும் வயாவிளான் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆவண செய்யுமாறு - வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ள 6லட்சம் மக்களுக்கும் பொதுவான யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஒரு விசேட கட்டடத்தொகுதியை அமைத்துத்தருமாறும் - ஆஸ்பத்திரியின் மாதாந்த மின்சாரக் கட்டணமான 7லட்சம் ரூபாவை செலுத்த வசதி ஏற்படுத்தி உதவுமாறும் - வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டனர்.

பிரதிநிதிகள் குழு இன்று மருதங்கேணிப் பகுதியைச் சென்று பார்வையிடவுள்ளது. இக்குழுவில் மைக் கொன்குறேவ் டேவின் (சிரேஷ்ட சக்தி நிபுணர்), நின் றெண்பேக் (கிராமிய சக்தி நிபுணர்), ஜெயந்த நாகேந்திரன் (சிரேஷ்ட உபதலைவர், உடைமைகள் முகாமைத்துவம்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பிரதேச செயலர்கள், மின்சார சபை அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் உட்படப் பலர் இக்கலந்துரை யாடலில் கலந்துகொண்டனர்.

(ஒ-10)

## இங்குள்ள உள்ளூர் அமைப்புகளுக்கு 'நியாப்' திட்டப்பணி வழங்காதது ஏன்?

### அரச சார்பற்ற நிறுவனங்கள் கேள்வி

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்குடாநாட்டில் 'நியாப்' திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியை உள்ளூர் நிறுவனங்களுக்கு கொடுக்காமல் வியாபாரத்திற்கு வந்த நிறுவனத்துக்கு கொடுத்தது ஏன்?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளது யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

இது தொடர்பாக இணையம் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் 2000ஆம் ஆண்டுமுதல் "நியாப் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கியின் நிதியுதவியோடு வடக்கு, கிழக்கு மாகாண சபை இத்திட்டத்தை பொறுப்பேற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கும் இத்திட்டங்கள் விஸ்தரிக்கப்படவேண்டுமென கோரிக்கைகள், அழுத்தங்கள் கொடுக்கப்பட்டமையால் இங்கும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உலக வங்கி தீர்மானித்தது. உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதியைச் சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் சந்தித்து இத்திட்ட அமுலாக்கம் பற்றி விரிவாக கலந்துரையாடினோம். உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களை அமுலாக்கத்தில் பங்காளிகளாக்க வேண்டியதன் அவசியம் தெளிவாக அப்போது விளக்கப்பட்டது.

இதன் தொடர் நடவடிக்கையாக கடந்த ஜனவரி மாதம் 'நியாப்' திட்ட அதிகாரிகள் உள்ளூர் நிறுவனங்களை யாழ்செயலகத்திற்கு அழைத்து திட்டம பற்றிக் கலந்துரையாடினார்கள். ஒரு மாதத்துக்குள் அடுத்த கூட்டத்தைக் கூட்டிப் பங்காளித்துவ நிறுவனங்களை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அக்கூட்டம் நடைபெறவில்லை.

திட்டத்தை அபகரிப்பதற்கு கொழும்பிலுள்ள சில தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் அரசியல் பலத்தை பிரயோகித்தன. இது பற்றி தகவல் வெளிவரவும் தொடங்கின. எமது இணையம் எதிர்ப்பை தெரிவித்து அழுத்தம் கொடுத்தமையால் திட்ட அபகரிப்பை கடந்த ஜூன் மாதம் வரையும் தடுத்து நிறுத்த முடிந்தது. ஜூலை மாதம் இடம்பெற்ற திரைமறைவு நடவடிக்கைகளினால் கடந்த மாதத்தில் "சேவா லங்கா மன்றம்" திட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய உள்ளூர் நிறுவனங்கள் இங்கு தொழிற்படுக் கொண்டு இருக்கையில் தற்போது வியாபாரத்திற்காக வந்துள்ள நிறுவனத்திற்கு எப்படி திட்டம் கொடுக்கப்பட்டது? இதனைப் பொறுப்பான அதிகாரிகள் பொதுமக்களுக்கு பத்திரிகைமூலம் விளக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். -என்றுள்ளது. (ஒ)

## 'வாந்திபேதி' சிகிச்சையளிக்க மந்திகை ஆஸ்பத்திரி தயார் நிலையில்

கரவெட்டி,செப்.11

வாந்திபேதி நோய்த் தடுப்பு சிகிச்சையளிக்க எந்நேரமும் தாம் ஆயத்த நிலையில் உள்ளதாக மந்திகை வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஏனைய பிரிவுகளால் வாந்திபேதி நோய் பரவியுள்ளது. ஆனால் இதுவரை வடமராட்சிப் பகுதியில் எவரும் வாந்திபேதி நோயால் தற்போது பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை எனவும் -

அப்படி ஏற்படின் அதை எதிர்கொண்டு பாதிப்புற்றவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் -

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

(ஒ-70)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செயது வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (7980)

Prima Broiler குஞ்சுகள், Prima அதிவிசேட பேட்டுக் குஞ்சுகள் 19.09.2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். ஒருகிழமை வயதுள்ள பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 19, முருகேசா ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8147)

Original Prima கோழித்தீன், மாட்டுத்தீன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8146)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் காலை 6 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8148)

ஊரெழு மேற்கில் பலாலி வீதிக்கு அருகில் 8 பரப்புக் காணியுடன் வீடும சேர்ந்தாற்போல் 14 பரப்புத்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.கனகசபாபதி, நில அளவையாளர், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.(8080)

டிஸ் அன்ரனா 10 அடி டிஜிட்டல் (DSR-2800) றிசீவர் L.N.BF பசுபிக் புதியது Sony 3CD Minihi-Fi MHC VX 333 செற் விற்பனைக்குண்டு தொடர்பு: 213B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 2863 (8121)

உரும்பிராய் வடக்கு, ஞானசம்பந்தர் ஒழுங்கை, சின்ராசா (சங்கரத்தை) தோட்டத்திற்கு அருகில் 10 பரப்புக் காணியும், வீடும் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. வாங்கவிரும்புவோர் தொடர்புகளுக்கு: பூதப்பிள்ளை நவரட்ணம் (காந்தி), கற்பகப் பிள்ளையார் கோயில்வீதி (நவசக்தி சனசமூக நிலையத்திற் கருகில்), உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (8116)

பலாலி றோட்டில் கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள இரண்டு கடைகளும் அத்துடன் சேர்ந்த வீடு வளவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி பவளம் திருநாவுக்கரசு, முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (8108)

நல்ல நிலையில் உள்ள Compute & Printer (Clolor) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பா.கோபி இல. 258, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (8136)

குபேட்டா லாண்ட் மாஸ்டர் K 75 Red (375 CC என்ஜின்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 127, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8147)

பதிவுசெய்யப்பட்ட புதிய பெட்டியுடன் கூடிய குபோட்டா லான்ட்மாஸ்ரர் விற்பனைக்குள்ளது. தொடர்பு:- 26, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (8145)

## வீடு விற்பனைக்கு

பலாலி றோட், திருநெல்வேலியில பிள்ளையார் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு 3 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி பவளம் திருநாவுக்கரசு, முதலாவது ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (8109)

## தவறிவிட்டது

நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழாவன்று (05-09-2002) பலாலிவீதி, கந்தர்மடம் சந்தி, பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்து தங்கச்சங்கிலி (பென்ரனுடன்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து யாழ்.மாநகரசபை (அரச கணக்காய்வுப்பகுதி) ச.யோகராசாவிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8135)

இளவாலையைச் சேர்ந்த அன்ரன் வலரையின் ஜொபப்சி பபியோலா என்பவரது தே.அடையாள அட்டை (இல.555983387V) யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. இதனைக் கணடெடுத்தவர்கள்(அன்ரன் வலரையின் ஜொபப்சி பபியோலா) திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் கேட்கப்படுகின்றீர்கள். (8153)

மோட்டார் சைக்கிள் திறப்புக் கோர்வை ஒன்று நெல்லியடியில் இருந்து வல்லிபுரக் கோயிலுக்குப் போகும் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி தமிழ்ப் பூங்கா அச்சகத்தில் கொடுத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். (8155)

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 32 வயது நிரம்பிய, செவ்வாய்க் குற்றமற்ற, 42 1/4 கிரகபாவம் உடைய, பயிற்றப்பட்ட ஆசிரிய மணமகனுக்கும், 27 வயது நிரம்பிய, செவவாய்க்குற்றமற்ற 28 1/2 கிரகபாவம் உடைய பட்டதாரி ஆசிரியருக்கும் படித்த, தகுதிவாய்ந்த மணமகள்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 1634, C/o உதயன். (8144)

## மணமகள் தேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் மணமகன்களுக்கு படித்த, அழகிய மணப்பெண்கள் தேவை. 28 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்பு: N. கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைகோட்டை. (8124)

இந்து கௌரவ, அத்த நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற, 31வயது, கனடாவில் தொழில் புரியும் மணமகனுக்கு அழகான, படித்த மணமகளை தேடுகின்றனர். சீதனம் பெண்ணின் பெற்றோர் தகுதிக்கேற்ப கொடுக்கலாம். மணமகன் இலங்கை வந்து மணமுடித்து Sponcer மூலம் கூட்டிச் செல்வார். 20ஆம் திகதிவரை 81/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 20இற்குப் பின் 45/1, கொட்டகேனா வீதி, கொழும்பு-13. T.P. 075-361128. (8143)

## திருமண சேவை

· எம்முடன் நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்களின் வசதிகருதி கடிதத் தொடர்பை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கிணங்க சகல விவரங்களையும் கடிதத்தில் எழுதி எம்மிடம் அனுப்பிப் பதிலைப் பெற்றுக்கொள்ளலாம். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8152)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? நோய் நீங்குமா? மற்றும் எதுவாயினும் ஜாதகம், கைரேகை, எண்சோதிடப்படி கேட்டுப்பாருங்கள்! தொடர்பு: டாக்டர் ந.சிவானந்தன் (பிரபல சோதிடர்) 264, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8137)

## மரண அறிவித்தல்

### செல்வி உஷானா பாலசுப்பிரமணியம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின பிரதமகுரு இரா.பாலசுப்பிரமணியக் குருக்களின் மூத்த புதல்வி செல்வி உஷானா (சாயா) 09.09.2002 திங்கட்கிழமை இறையடிசேர்ந்தார்.

இவர் வத்தளை றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை மாணவியாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2002) புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு வத்தளை ஹேகித்த பொதுமயானத்தில் (ஆலயத்துக்கு எதிரே) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

*183A, ஹேகித்த றோட்,*
*வத்தளை.*
*தொலைபேசி: 936935* (C/23768)

தகவல்:
இரா.பாலசுப்பிரமணியக்குருக்கள்
குடும்பத்தினர்.

## பருத்தித்துறைக்கு கப்பல்கள் வந்தன

யாழ்ப்பாணம்,செப்.11

மலேசியாவிலிருந்து 'மரினோ' கப்பல் ஒரு தொகுதி சிமெந்தை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்துள்ளது.

இக்கப்பலுக்குள் களஞ்சிப்படுத்தப்பட்டுள்ள சிமெந்து உடனுக்குடன் பொதி செய்யப்பட்டு இறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'சஜிந்த' கப்பலும் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துள்ளது. இதில் இருந்து பொருள்களை இறக்கும் பணி நடைபெற்று வருவதாகவும தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## முகாமிலிருந்து புலிகளின் பகுதிக்கு மின்சாரம்

முகமாலையில் படையினரின் சோதனை நிலையத்தில் உள்ள மின் பிறப்பாக்கியிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பயணிகள் தங்கும் கொட்டகைகளுக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஏ-9 பாதையூடாக போக்குவரத்தை மேற்கொள்வோர் மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்கப்படும் நேரம் கடந்துவிடும் தருணங்களில் இந்தக் கொட்டகைகளில் தங்குவதால் இக் கொட்டகைகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின் கம்பங்கள் இன்னமும் நாட்டப்படாதபோதிலும் வயர்கள்மூலம் கொட்டகைக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. (ஒ-117)

## விற்பனைக்கு

DISH ANTENNAக்கள்

8 அடி, 10 அடி அளவுகளில் DISH ANTENNAக்கள் விற்பனைக்கு உண்டு.


விலை ரூபா 18,000/= முதல்.

இலகு தவணைக் கடன் அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளலாம்.


அருண் வீடியோ,
பிரதான வீதி,
நெல்லியடி.
*T.P.: 021-63217* (8165)


PX

RELIABLE TV BOOSTER AT REASONABLE PRICE




NEW MODEL
A-35
VHF-UHF
• சக்தி (பெறுதல்)
35db
• வேறு சத்தங்கள் இல்லை
• தண்ணீர் உட்புகாத முழுமையான உறை



Most Popular TV Booster in Sri Lanka

TV CENTRE
4, Keyzer Street, Col-11.Tel: 434742

PX MANUFACTURED BY GOVERNMENT APPROVED "A" GRADE QUALITY CONTROL FACTORY IN TAIWAN



புதிய ஆரம்பம் நெல்லியடியில்

FUJI COLOUR LAB

பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களை எதிர்பார்க்கின்றோம்.
1. PHOTO PRINTER(Technician)
2. காசாளர் *(பெண்கள் - வடமராட்சி வாசிகள் மட்டும்)*
3. தொழில்நுட்ப உதவியாளர் *(இருபாலாரும்)*

☛ புகைப்படத்துறை அனுபவமுள்ளவர்கள், பயிற்சி பெற விரும்புபவர்கள் வரவேற்கப்படுவர்.
வயது: 20 - 40

முன் அனுபவம், கல்வித் தகைமை, நற்சான்றிதழ்களுடன் 13.09.2002ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
ஜமுனா ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி. T.P.: 021 - 63217
உங்கள் ஞாபகங்களை எங்கள் படச்சுருளில் சேமியுங்கள். (8170)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்
திரு.றிச்சாட் அன்ரனிதாசன் குலாஸ்
(மோட்டார் வாகன பரிசோதகர்)
அவர்களின் அன்புத் தந்தையார்

### அன்ரனி றிச்சாட் குலாஸ்

அவர்களின் மறைவினையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர் தம் துயரினை நாமும் பகிர்ந்துகொள்கின்றோம்.

உதவி ஆணையாளரும்,
அலுவலர்களும்.
*மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,*
*யாழ்.மாவட்டம்.* (8175)

நாச்சி அம்பாள் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 28ஆம் நாள் (13.09.2002) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சித்தயோகமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| **கணேசமூர்த்தி** | **ஜெயமதி** |
| (செல்வம்) | (ஜெயா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |



இறைவன் திருவருளால் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு பெருமாள் கோயில் மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் ஸ்ரீ லஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் நடைபெறவிருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்தும் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி இரத்தினம் தம்பதியினர்
முகமாலை, எழுதுமட்டுவாழ்.
*த.முகவரி:* கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

திரு. திருமதி நன்னித்தம்பி தம்பதியினர்
கொடிகாமம் வடக்கு,
கொடிகாமம்.

(இருவீட்டார் அழைப்பு) (8171)

## இனிது வாழ வாழ்த்துகின்றோம்!

இன்று திருமண வாழ்வில் இனிதே இணையும் புதுமணத் தம்பதிகள்

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
|---|---|
| சி.கர்ணன் (B.A.) | வை.ஜெயபாலினி (துர்க்கா) |
| *(சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)* | *(நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)* |

ஆகிய இருவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று இனிதே நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
திட்டமிடல் கிளை, பிரதேச செயலகம், கோப்பாய்.
(8163)

# தமிழா, பயப்படாதே! நல்ல காலம் வருகிறது

புரட்சிக் கவிஞர் சுப்பிர மணிய பாரதியாரின் 81ஆவது நினைவு தினம் இன்றாகும். அவர் படைத்த இந்த ஆக்கம் அவரது நினைவுதினத்தையொட்டி இங்கு பிரசுரமாகிறது.

தமிழா, தெய்வத்தை நம்பு. உனக்கு நல்ல காலம் வருகின்றது.


உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய வங்கண்ட கவிகள், அற்புதமான சங் கீத வித்துவான்கள், கைதேர்ந்த சிற் பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்று கின்றார்கள். அச்சமில்லாத தர்மிஷ் டர் பெருகுகின்றனர். உனது ஜாதி யிலே தேவர்கள் மனிதராக அவதரித் திருக்கிறார்கள். கண்ணை நன்றா கத் துடைத்துவிட்டு நான்கு பக்கங் களிலும் பார், ஒரு நிலைக்கண்ணா டியிலே போய்ப்பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பல சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன் னைச் சார்கின்றன.

தமிழா, ஊர்தோறும் தமிழ்ப் பள் ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி பற்றி வேற்றுமைகளை வளர்க்காதே. 'ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக் கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கரு தாதே. முற்காலத்துத் தமிழர் மனை வியை "வாழ்க்கைத் துணை" என் றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.



வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பய னடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமை கள் பேசி விலங்குகள்போல் நடந்து கொள்ளாதே.

தமிழா, உன் வேலைகள் அனைத் திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கை களை, லௌகீகக் கொள்கைகள், வைதிக நடை - எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கி விடு. வீட்டிலும், வெளியிலும், தனிமை யிலும், கூட்டத்திலும், எதிலும், எப் போதும் நேர்மை இருக்கவேண்டும்; உண்மையிருக்க வேண்டும் நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்ற வரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக் கெல்லாம் வேர்; உண்மை இன்பத் திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத் மாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை. நிலவும்படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல் லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. "முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந் திய சாஸ்திரம் பொய்" என்று தீர் மானம் செய்து கொள்ளாதே. காலத் துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? "தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக் கிறார்கள்" என்று பஞ்சதந்திரம் நகைக் கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த் தங்கள் என்று பெரியோர்கள் காட் டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தாருக் கும், பிறர்க்கும் நீ செலுத்தவேண் டிய கடமை, 'பிறர்' என்பதனுள் வைய கம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நில மும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல் இனப்பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம். இச் செல் வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட் டளை.

இன்பம் என்பது இனிய பொருள் களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரச வஸ்துக்களை அனுபவிப்பது. இவ் இன்பங்களை எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பரா சக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனி மையும் அழகுமுடைய வஸ்துக்க ளெல்லாம் வசப்படுக. பஞ்சபூதங் களும் உனக்கு வசப்படுக. நீ எப் பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. "வீடு" என்ற சொல் லுக்கு "விடுதலை" என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங் களும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய் வான். தமிழா, உனது புருஷார்த்தங் கள் கைகூடுக! ✦



வடமராட்சி வலயக் கல்வி அலுவலகப் பிரிவில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் அனுசரணையோடு பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் 'பாடசாலை மட்டக் கல்வி அபிவிருத்தி' எனும் பொரு ளில் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிநெறி நடைபெற்றது. அப்பயிற்சியின்போது எடுத்த படம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# தமிழ் மக்களிடையே தமிழ் உணர்வு இயல்பாக இருப்பது மிக அவசியம்

## சமாதானம் மலரும் வேளையில் ஏற்படவேண்டிய நிலைப்பாடு

மொழி என்பது ஒருவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடிய 'கருத்துச் சாதனம்' எனக் கருதப்படு கிறது. இக்கருத்து மொழியின் பண் பாட்டுத் தன்மையை மட்டுமே குறிக் கின்றது.

ஆனால், மொழியின் இயல்புகள் இன்னும் ஆழமானவை; விரிவானவை; வளர்ந்தவை. 'மொழி' ஒருவர் எண் ணத்தை எடுத்துரைக்கும் கருவி மட்டு மல்ல எண்ணத்தை அறிவிக்கும் கருவியுமாகும். மொழியின்மூலம் அம் மொழியாளரின் வாழ்க்கை வழியை யும் உணரமுடியும்.

மொழி ஒரு தேசிய இனத்தின் பண்பாட்டுக் கருவூலம்; தொன்மைத் தொடர்பு, அவ்வினத்தின் வாழ்முறை, கருத்தோட்டங்கள், சிந்தனை ஊற் றுகள், செவ்வியல் வேர்கள் போன்ற வற்றின் சீர்த்திறம்; சமூக வளர்ச்சி - தளர்ச்சிகளைக் காட்டும் திசைகாட்டி, வழிவழியினதான சமுதாயப்போக்கு களின் இணைப்புப்பாலம்.

எனவே, ஒரு தேசிய இனத்தின் உயிரோட்டமாகத் திகழும் மொழி காக்கப்படவேண்டியது அவசியமா கும். அத்துடன் வளர்க்கப்படவேண் டியதுமாகும்.

ஒரு நாட்டை அடிமைப்படுத்தவோ, ஓர் இனத்தைச் சிதைத்துவிடவோ அவர்களின் மொழியை அழித்துவிடு என்ற கொள்கையைக் கடைப்பிடித்த அரசுகளின் வரலாறுகள் உலகம் அறிந்ததே.

ஓர் இனமாகத் தம்மை உயர்த்தித் தம் உரிமை வாழ்வைப் போற்றி வாழும் மக்களை அனைத்துப் புலங் களிலும் இணைக்கும் மொழி அழிந்தி டுமானால் அம்மக்கள் எழுச்சிகுன்றி, உருக்குலைந்து ஒடுங்கிவிடுவர் அந் நாட்டினை அடிமைப்படுத்தல் எளிதாகி விடும்.

சர்வாதிகாரியான ஹிட்லர், ஒரு நாட்டை வீழ்ச்சியுறச் செய்யவேண்டு மெனில் முதலில் அவர்தம் மொழியை அழிக்கும் வழியைக் காணவேண்டும - என்றார்.

ஆனால், அயர்லாந்து விடுதலை வீரர் டிவேலரா, என் நாட்டின் உரி மையை 'இழக்க நேரிட்டால் அதை இழப்பேன். ஆனால், என் மக்களின் மொழியை ஒரு நாளும் இழக்கமாட் டேன் - என்றார்.

ஏனெனில், மொழியைக் காத்தால அடிமையுற்ற நாட்டினையும் ஒருநாள் மீட்கமுடியும் என்பது அவருடைய திடமான நம்பிக்கை. ஒரு தேசிய இனத்தில் தாய்மொழிப் புறக்கணிப்பு அம்மக்களின் தற்கொலையையே குறிக்கும் என்பது உறுதி.

தேசியம் என்பது ஒரு நாட்டு மக் களிடையே தோன்றக்கூடிய 'பொதுப் பற்றினை' அல்லது நாட்டுடன் ஒன் றிய உணர்வினை 'தேசியம்' அல் லது 'நாட்டுப்பற்று' எனலாம்.

ஒரு நாட்டு மக்களின் மொழி, இலக்கியம், ஒத்த மரபுகள், நெடிய வரலாறு, பொருளியல் நிலை, வாழ் வியல் முறை, பொதுப் பண்பாடு, இன உணர்வு என்பன தமது நாட்டுக்குத் தாமே சொந்தக்காரர் என்று தன்னு ரிமை போன்றவற்றுடன், அந்நாட்டுடன் ஒன்றிய இயல்பையே 'பற்றுறுதி' அல்லது 'தேசியம்' எனலாம்.

தேசிய இனங்களிடையே நாட்டி னது அமைவு (Nationhood) இருந்த போதும் தனித்தன்மை கொண்ட சில விந்தை வரலாற்று சூழ்நிலை காரண மாக அவை முழுத்தன்னுணர்வுடன் (Full Conscience) வரவில்லை.

**பேராசிரியர் பொன்.சக்திவேல்**

ஒரு நாட்டு மக்களின் பற்றுறுதி ஆணிவேர் பழைமை மக்களின் போ உணர்வாகும். இதனை ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய நாட்டியல்புப் பண்பு (Nativity) எனலாம். இந்நாட்டியல்புப் பண்பே 'பண்டைத் தேசியம்' எனப் படும்.

ஒருவன் தன் வழிவழியாக வாழ்ந்துவரும் நிலப்பகுதி தனக்குப் பிறப்பிலேயே உரிமைப்பட்ட வாழ்வி டம் என்ற உள்ளார்ந்த உணர்வோடு பொது நிலையில் அந்நாட்டுடனும், அந்நாட்டு இயல்புடனும், அதன் அரசுடனும் இயல்பாகக் கொள்ளும் பற்றுறுதியே பண்டைய தேசியம் எனப்படுகிறது.

பற்றுறுதி என்பதைக் கூறுமிடத்து வீரம் என்ற திருக்குறள் அதிகாரம்

*"புறந்தார்கண் நீர்மல்கச்சாகிற்பின் சாக்காடு*
*இரந்துகோள் தக்கது உடைத்து"*
(குறள்: 730)

என விவரிக்கிறது.

தலைவனின் கண்ணீர் பெருக வருந்துமாறு இறப்பது விரும்பத்தக்க சாவாகும். இதனையே பற்றுறுதி எனப் படுகிறது. வீரம் என்பது பேராண்மை. அவ்வீரம் முறையோடு வெளிப்பட வெற்றியை நாட்ட தேவைப்படுவது படைக்கலன், தான் சார்ந்த நாட்டை ஆளும் தன்மையே படைக்கலன.

*"பேராண்மை என்பதறுகண் ஒன்றுற்றக்கால்*
*ஊராண்மைமற்று அதன் எஃகு"*
(குறள்: 773)

ஒவ்வொரு பொது மகனும் தான் யார்? தனது மொழி எது? தனது இனம் எது? என்பன போன்றவற்றை அறிந்துகொள்ளத் தேவையான - அடிப்படையான - அறிவு கூட பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வழங் கப்படாததால், அறியாமை இருளில் பல தலைமுறைகள் மூழ்கிவிட்டதால், அறிஞர்கள் பலரால் இயற்றப்பட்ட பல அரிய அறிவுத்துறை இலக்கி யங்கள் சில சிதறல்கள் மக்களின் அறிவுக்கும், உணர்வுக்கும் தொடர முடியாததால் பண்டைய பண்பாட்டின், அறிவூற்றத்தின் வீச்சு இன்றும் நீறு பூத்த நெருப்பாகவுள்ளது.

தமிழர்களாகிய 'நாம் அனைவரும தமிழர்கள்' என்ற ஒருங்கிணைப்புடன இன உணர்வைப் பெறுவதுடன் தமிழ மொழி இலக்கியங்கள், கலைகள், சிந்தனை நூல்கள், கருத்துநிலை, கல்வி, பண்பு, சமூக அமைப்பு, சமு தாய ஒழுக்கம், வாழ்க்கை முறை, வழிவழியான மரபுகள் என்பவற்றை யும் உள்ளீடாகக் கொண்டு பண்பாட் டுடன் மிளிரவேண்டும்.

மொழி உணர்வு என்பது மூச்சுக் காற்றைப் போன்றது. அது தடைப்படும போதுதான் அதன் உயிரியல்பும் இன் றியமையாமையும் புரியும்.

தமிழ் மக்களிடையே தமிழ் உணர்வு இயல்பாக இருக்கவேண்டும். தமிழுக்கும், தமிழியலுக்கும், தமிழர் பொருளியல் வாழ்க்கைக்கும் புற அழுத்தங்கள், பிறரின் நெடுபிடிகளே, இயல்பான அத்தமிழுணர்வு தீர தன்மையுடன் வீறிட்டு கிளம்பியமை யின் விளைவே இன்றைய சமாதான மும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஆகும்.

தமிழரின் பண்பாட்டு இலக்கியத் தையும், அவர் தம் தொன்மையையும் ஈராயிரம் வருடங்களுக்கு நெடிய சூழ்ந்து வரலாற்று அரசியல், சமூகம், இலக்கியம் என்ற முப்பெரும் பகுப்பு களின் அடிப்படையில் ஆய்வுசெய் தால், அரசியல் வரலாறும், சமூகவி யல் வரலாறும் ஏறத்தாழ இணைந்தே செல்கின்றன.

சமூகத்தின் தேசிய அடிநாதமான மொழி, வரலாறு மட்டும் தனிவழியே அவ்வப்போது பிணங்கியும், நெருங்கி யும், இணங்கியும் இயங்கி வந்ததை மறுப்பதற்கில்லை. தமிழ் வழியே வளர வேண்டிய கலைகளும், பண்பாட்டுக் கூறுகளும் வளர வழிவகுப்பது கட மையாகும். ☆

# புலிகள் மீதான தடை நீக்கம் சமாதானத்துக்கான அடித்தளம்

## தர்மநிலையத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.11

'விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் நிலையான சமாதானத் திற்கான அடித்தளத்தினை இட்டுள் ளது' இவ்வாறு தெரிவித்தார் தர்ம நிலையத்தின் தலைவர் மகனல் கடு வல சங்கையக்கார தேரர்.

அவர் மேலும் தெரிவித்திருப்ப தாவது:-

பொருத்தமான சந்தர்ப்பத்தில் புலி கள் மீதான தடையை நீக்கி பேச் சில் ஈடுபட்டுள்ள அரசின் செயல் பாராட்டத்தக்கதாகும்.

உலக வரலாற்றிலேயே பாரிய திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய இந் தச செயல் அபிவிருத்தியை நோக்கி முதல் பயணத்தை முன்னெடுக்கும் செயலாகும்.

இத்தகைய அரிய சந்தர்ப்பத் தில், சில சுயநல அரசியல்வாதிகள் இதனைக் குழப்பும் முயற்சியில் ஈடு பட்டு வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் அரசியல்வாதி கள் நாட்டு நலனில் அக்கறை கொண்டு பிரதமரின் கரத்தைப் பலப் படுத்துதல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-12)

# சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுதினம் மட்டுநகரில் அனுஷ்டிப்பு!

கொழும்பு,செப்.11

மட்டக்களப்பு சத்துருக்கொண்டா னில் தமிழ்மக்கள் படுகொலை செய் யப்பட்ட சம்பவத்தின் 12ஆவது ஆண்டு நிறைவுநாள் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதி 186 பொதுமக்கள் இரா ணுவ முகாமுக்கு அழைத்துச் செல் லப்பட்டு கொலை செய்யப்பட்டமையை நினைவுகூரும் முகமாகவே மட்டக் களப்பில் இந்நிகழ்வுகள் இடம்பெற் றுள்ளன.

இப்படுகொலைகளை நினைவு கூரும் சுவரொட்டிகள்,பதாகைகள் என்பன மட்டக்களப்பின் பல பகுதி களிலும் ஒட்டப்பட்டிருந்தன. அத் தோடு பேரணி ஒன்றும் பொதுமக்க ளால் நடத்தப்பட்டது. மட்டக்களப்பு காந்தி சதுக்கத்திலிருந்து புறப்பட்ட பேரணி பொத்துவில் பனிச்சேரி சந்தியை அடைந்தது.

படுகொலை செய்யப்பட்டவர்க ளின் நினைவாக அங்கு நிர்மாணிக் கப்பட்ட நினைவுத்தூபி திறந்துவைக் கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் அரவிந்த் உட்பட பல பிரமுகர்கள் ஈகச்சுடரினை ஏற்றிவைக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த நவகாந் நினைவுத்தூபியைத் திறந்து வைத்தார்.

(ஓ-12)

# பேச்சுக்குமுன் தடைநீக்கப்பட்டதை வரவேற்கிறது சமாதானமுன்னணி

கொழும்பு,செப்.11

தாய்லாந்துப் பேச்சுக்கு முன்ன தாக புலிகள்மீதான தடையை அரசு நீக்கியுள்ளதை பொது அமைப்புக் களை உள்ளடக்கிய மக்கள் சமாதான முன்னணி வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அந்த முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள்மீதான தடையே பேச்சுக்கு முட்டுக்கட்டை யாக அமைந்தது. அத்தோடு அவர்கள் ஜனநாயக வழியில் பிரவேசிப்பதற் கும் அது முட்டுக்கட்டையாக அமைந் திருந்தது.

'இத்தடை நீக்கப்பட்டதன்மூலம் சமாதானப் பாதையில் தடைகளின் றிச் செல்வதற்கும் வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு விரைவில் ஒரு சமாதானம் உருவாக வழி செய்ய வேண்டும் என வும் அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ஓ-12)

## காரைநகர் கூட்டுறவுச் சங்க பணியாளருக்கு

யாழ்ப்பாணம், செப்.11

முல்லைத்தீவு மாவட்டம் புதுக் குடியிருப்பில் இயங்கி வந்த முல்லை-காரைநகர் ப.நோ.கூ.சங்கம், தாய்ச் சங்கமான யா/காரைநகர் ப.நோ.கூ. சங்கத்துடன் இணைக்கப்பட்ட பின்னர் இன்று வரை கடமைக்குத் திரும்பாத சங்கப் பணியாளர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் கடமைக்கு சமுகமளிக்கவேண்டுமென காரைநகர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் சமுகமளிக்கத் தவறும் பணியாளர்கள் தாமாகவே கடமையில் இருந்து விலகியதாகக் கருதப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

தென்மராட்சி,செப்.11

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.உள்ளூராட்சி திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் 13ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## 'நோவிப்' குழு யாழ்.விஜயம்

'நோவிப்' அமைப்பின் ஆலோசகர் டுலான்டி சில்வா தலைமையிலான குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது.

இந்தக் குழுவினர் தமது அமைப்பினால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக இன்று காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் கலந்துரையாடலொன்றை நட்த்தவுள்ளனர்.

(ஒ-10)


### உ

### உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில்

# வருடாந்தத் திருவிழா

**12.09.2002 வியாழன் - 21.09.2002 சனி**

நாளை **(12.09.2002)** வியாழக்கிழமை

முற்பகல் 10.45 மணி வசந்தமண்டபப் பூசை,
நண்பகல் 12 மணி கொடியேற்றம்.

*நாதஸ்வர இசை:*

இணுவில் க.இராசன் குழுவினர்
இணுவில் ப.சிவதாஸ் குழுவினர்
கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர்

திருவிழாக்காலங்களில் மாலை வேளைகளில் 'கந்தபுராணம்' என்னும் பொருளில் கானகதாவாரிதி சிவத்திரு.வை. நித்தியானந்தசர்மா தொடர்சொற்பொழிவு நிகழ்த்துவார்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கருணாகரப்பிள்ளையார் கோயில்,*
*உரும்பிராய்.* (8158) - உபயகாரர்கள்.



# சுற்றுலா

சுற்றுலா சம்பந்தமாகப் பதிவுசெய்த

**2ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்**

அனைவரையும் நாளை (12-09-2002) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் மாணவர் பொது அறைக்குத் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(8161) சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள்,
2ஆம் வருடம், கலைப்பீடம்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 12 - 05 - 1934



மறைவு 12 - 08 - 2002

## திருமதி மனோன்மணி ஆனந்தராசா (பூமணி)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த
உங்களை மறக்கவே முடியாது.
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*இறைபதமடைந்த எமது இல்லத்தரசியின் இறுதிக்கிரியைகளில் கலந்து, எமது பிரிவுத் துயரைப் பகிர்ந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (2002.09.11) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*52, குமார வீதி, நல்லூர்.* (8130) மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# தாரிகை நுண்கலையகம்

**பயிற்சி வகுப்புகள்**

- உடையமைத்தல்
- பூவேலை
- HAIR Style & Make - up
- துணியில் வர்ணமிடல்
- கைப்பணிக்கலை, ஓவியம்

மேற்படி பயிற்சிகள்

**16.09.2002**

திங்கள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன!

☆ தனி ஒரு பயிற்சியிலும் கலந்துகொள்ளும் வசதி உண்டு.

☆ சான்றிதழுடன் கூடிய 3மாத கால பயிற்சியொன்றிற்கான முழுமையான கட்டணம் ரூ.400/= மட்டுமே!

*அனுமதிகள் வழங்கப்படுகின்றன.*

(8154) செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.



# 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1931 - 12 - 13



மறைவு 1998 - 09 - 11

## அமரர் மார்க்கண்டு ஈஸ்வரம்

*(மராமத்து பொறியியலாளர், யாழ்.மாநகரசபை)*

நான்காண்டு சென்றது! ஈரவிழிகள் காயவில்லை!
என்றும் ஓயாது உங்கள் நினைவலைகள்
நோய் வந்து படுத்தாலும் நோகுதைய்யா எம்முள்ளம்
வேதனையைத் தந்துவிட்டு எங்கு அப்பா சென்றுவிட்டீர்?

*175, நாயன்மார் வீதி,*
*நல்லூர்.* (8142) பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



விலை 14/=

# சுடர் ஒளி

## 10-09-2002 இதழில்




- பொறுமை இழக்க வைத்த பருத்தித்துறை வீதித்தடை
- தாய்லாந்துப் பேச்சுக்கள் இருதரப்பினரும் ஆயத்தம் கதவைத் திறந்துவிட்ட புலித் தடைநீக்கம்
- கைதிகள் பரிமாற்றம் தாமதமானால் பாதகம்
- குடும்பத்துடன் இணைந்து குதூகலித்த போராளிகள்
- 1961 சத்தியாக்கிரகப் போராட்டத்தை மலையகத்துக்கும் விஸ்தரிக்க முடியாது போனது ஏன்?
- பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரத்துக்கு ஏற்பட்ட கதி!
- யூரித் தோட்டக் கைது மலையக வரலாற்றில் வடு
- மற்றும் தேரடி, பித்தன் பதில்கள், மசால மிக்ஸ், க்ரைம், சினிமா, இணையத்தளங்களிலிருந்து, விளையாட்டு, சித்திரத் தொடர்கதை, சிறுவர் பகுதி உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்

**சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது**
**உங்கள் முகவரிடம் கேட்டுவாங்குங்கள்.**

(C/23759)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம் வர்த்தக கைத் தொழில் சம்மேளனமும் டிசல் அன் மோட்டார் எஞ்சினியரிங் கொம்பனி லிமிட்டெட், பொஸ்(Bosch) பகுதி யினரும் இணைந்து 'வலு உபகர ணங்களைப் பயன்படுத்துவது எப் படி? என்ற தலைப்பிலான பயிற் சிப்பட்டறையை நடத்தவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறை நாளை முற்பகல் 9மணிமுதல் 12மணி வரை யாழ்ப்பாணம் பிரதான வீதி யில் உள்ள கைத்தொழில் திணைக்கள மரவேலைப் பகுதியில் நடைபெறவுள்ளது. (ஐ-3)


உ
ஓம் கணபதி நம!

**CHINA** விலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர செரமிக் பொருள்கள். சகல விதமான **GLASS** வகைகள் மற்றும் அன்பளிப்புப் பொருள்களுக்கும்

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு

**VEMAKE**

51, Dam Street, Colombo - 12.
Tel: 332798, 423030
FAX: 445769, E Mail: vemaki @ visual.lk
OFFICE:
UG 180/1/18 Peoples park Complex,
Colombo - 11



**WALL TILES, FLOOR TILES**

மற்றும் குளியலறை உபகரணங்களை உத்தரவாதத்துடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:



**விமாகி**

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(8177)

சுகமான குளியலுக்குத் துணை "விமாகி" உபகரணங்களே!



## ஞானோதயா அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி.

A/L 2003 பகல்நேர வகுப்புகள் ஆரம்பம்: 13.09.2002
காலை 9 - 10 தமிழ்
10 -11 இந்து நாகரிகம்

தமிழ் : திரு.அகிலன்
இந்துநாகரிகம் : திரு. இராஜேஸ்கண்ணன்
அளவையியல் : திரு.ஜெயசுரேஸ்

(C-23770) - நிர்வாகம்.


## மரண அறிவித்தல்

### தம்பையா தம்பிராசா

மட்டுவில் தெற்கு, வாகையடியைச் சேர்ந்த தம்பையா தம்பிராசா அவர்கள் நேற்று (10.09.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தவமணி, சிவனடியான் (தேவி ஸ்ரோர்ஸ் - சந்நிதி வீதி, அச்சுவேலி), பாக்கிய நாதன் (கனடா), இரத்தினவரதர் (ராசன் - உழவு இயந்திர உரிமையாளர், நுணாவில்), வரதலட்சுமி (ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி), சிவ குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணபிள்ளை, பாலசரோஜினி, தேவி, ரதி (கனடா), தயாநிதி, இந்திரபவன் (சியானி பஸ் உரிமையாளர்), மதிசோபனை (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2002) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாகையடி,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (8187)

தகவல்,
த.சிவனடியான். (மகன்)

உ

## திருமண வாழ்த்து

இல்லறவாழ்வில் இன்று இனிதே இணையும் புதுமணத் தம்பதிகளான
செல்வன் **தர்ஷனன்** - செல்வி **ஆனந்தஜோதி**
ஆகிய இருவரும்



**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"** என்ற தெய்வப்புலவர் திருவாக்குக்கிணங்க ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி இசையும் நடனமும் ஒன்றித்து ரசிகப்பெருமக்களை மகிழ்விப்பது போல் வாழ்வில் என்றும் இன்பகரமாக இருக்கவேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிப் பிரார்த்தித்து மனமார வாழ்த்துகின்றோம்.

**சுப்பலோ வீடியோ ஓடியோ அண்ட் கலர் லாப்**
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P-2082

206, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு-13.
T.P-074-618370

(C-23772)

## மணியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்

இன்று இல்லற வாழ்வில் இனிதே இணையும்
எமது நிறுவனத்தின்
சமூகக்கல்வி ஆசிரியை **தர்மினி அருளானந்தம்**
அவர்களையும் அவர்தம் மணவாளன்
**தம்பு சிவஞானசுந்தரம்** அவர்களையும்
சீரும் சிறப்பும் பெற்று
பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

**மணி கல்வி நிறுவனம்,**
வேலணை.

இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
(8184)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
திருமதி **க.திரேசாமலர்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இருதயநாதன் எலிசம்மா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர் களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
ஊர்காவற்றுறை. (8179)

தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.

உ

## திருமண நாள் ஒத்திவைப்பு அறிவித்தல்

அன்புடையீர்!

நாளை (12.09.2002) வியாழக்கிழமை நடைபெறவிருந்த

### றமேஷன் - சுபாஜினி

ஆகியோரது திருமண வைபவ நாள் மணமகனின் தாயாரது கடுஞ்சுகவீனம் காரணமாக மறு அறிவித்தல்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தரு கின்றோம்.

எமது அழைப்பிதழ் கிடைக்கப்பெற்ற அனைவரும் இந்த அறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன் புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.திருமதி ஐயாத்துரை, திரு.திருமதி சுப்பிரமணியம்,
*நீர்வேலி வடக்கு,* *அராலி தெற்கு,*
*நீர்வேலி.* (8178) *அராலி.*

## சமய சந்நிதிகளில்

வண்ணை சாந்தையர்மட கற் பக விநாயகர் கோவிலின் அலங் கார உற்சவம் இன்றுமுதல் ஆரம்ப மாகி எதிர்வரும் 25ஆம திகதிவரை நடைபெறவுள்ளது. (ஓ-9)

★ ★ ★

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் மணவாளக்கோலத் திருவிழா இன்று காலை 7மணி முதல் நடைபெறவுள்ளது.

அன்று நண்பகல் மகேசுர பூசை இடம்பெறும். மாலை 4மணிக்கு வசந்த மண்டபப் பூசை மற்றும் திருவூஞ் சலைத் தொடர்ந்து அம்பாள் பூந்தண டிகையில் வீதியுலா வருவார். (ஓ-9)

★ ★ ★

புங்குடுதீவு கிழக்கு இராஜேஸ் வரி அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஓ-9)

★ ★ ★

ஈவினை மத்தி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 தினங்கள் நடை பெறும் இந்த மகோற்சவத் ததின் சப்பரத்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதியும் ரதோற்சவம் 20ஆம் திகதி யும், தீர்த்தத்திருவிழா மறுநாளும் நடைபெறவுள்ளன.


## முக்கிய அறிவித்தல்

**A/L 2003** கணித. விஞ்ஞான
*மாணவர்களிற்கோர் அரிய சந்தர்ப்பம்*

★ முக்கிய அலகுகள் யாவும் ஒரே காலப்பகுதியில்

"PHYSICAL CHEMISTRY"
பிரிவு I Tue.-3-4 & Fri-5-6
பிரிவு II Mon-5-6 & Thu.-4-5
ஆரம்பம்-16-09

"Inorganic"
பிரிவு I Mon. Fri 6-7 pm
பிரிவு II Wed 6.30-7.30 & Fri. 4 - 5
ஆரம்பம்-11-09 (இன்று)

"ORGANIC"
Mon., Fri. 7-8 pm

"Paper class"
பிரிவு I Tue.Thu. 5-6 p.m.
பிரிவு II Tue.Thu. 7.30-8.30 a.m
பிரிவு III Sat. & Sun. 8-9 a.m
பிரிவு IV Sat. & Sun. 10-11 a.m

"வளம்"
Thurs 3-4 p.m

★ எல்லா அலகுகளிற்கும் ஒரே யொரு கட்டணம்.
★ எல்லா மாணவர்களும் paper - class எடுத்தல் வேண்டும்.
★ இவ்வாரம் மட்டுமே அனுமதி. எக் காரணம் கொண்டும் இடைக்காலப் பகுதி யில் மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**CHEMISTRY CENTRE** (8180)
83, பலாலி வீதி, கந்தர்மடம்.



**CHEMISTRY CENTRE**
பலாலி வீதி, கந்தர்மடம்.

**A/L 2004**
"Mechanics"
Wed., Thu. 5-30 - 6.30
"Waves & Vibration"
Wed., Thu. 4-30 - 5.30
"Heat"
Sat., Sun. 3 - 4
BY: சிவலிங்கம்
"Inorganic"
Wed 7 -8, Fri. 4 - 5
BY: அன்பழகன்
(8181)




**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சிரஞ்சீவி. ராஜேந்திரம். ஜோதிகா நடித்த
**ஓன்டுத்தி**
1 2 3 (சினிமா)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்.
10.30, 2.30 மட்டும்
ரஜனி. மனிஷா. கவுண்டமணி நடித்த
**பாபா**
இரவு 7.00, 9.00 மட்டும்
**FINAL FIGHT**
(KARATE FILM)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சூர்யா, லைலா, சினேகா நடித்த
**உன்னை நினைத்து** (சினிமா)
சனி, ஞாயிறு: 11.00, 3.30, 6.30 (பு.நே.)






சிறந்ததிலிருந்து விளங்குங்கள்

# சிறப்பாக

அவுஸ்திரேலியாவில் உள்ள 4 சிறந்த பல்கலைக்கழகங்களை எட்லொக்கேற் தற்போது பிரதிநிதிப்படுத்துகின்றது. கல்விப் பொ.த.உயர்தரத்தில் 3 சித்திகளுடன் உலகில் உள்ள அதியுயர்ந்த பல்கலைக்கழகங்கள் ஒன்றில் சேருங்கள். அவுஸ்திரேலியாவில் உள்ள சிறந்த எட்டுப் பல்கலைக்கழகங்களில் 4 பல்கலைக்கழகங்களாக சிட்னி, மெல்போர்ன், அடிலெயிட் மற்றும் கன்பெரா அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், ஆகிய பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன.

* உலகைச் சுற்றியுள்ள ஏனைய பிரசித்தமான பல்கலைக்கழகங்களுடன், ஆனால் சமஅளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்துடன் ஒப்பிடுகையில் ஆகுசெலவு அனுகூலமானவை.
* நியூ சவுத் வேல்ஸ், விக்ரோரியா, தென் அவுஸ்திரேலியா மற்றும் யுஎஸ்வுஇன் மாநிலங்களின் தலை நகரங்களில் பிரதான பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ளதால், ஏதாவது மாநிலத்தைத் தெரிவு செய்யுங்கள்.
* .·.பிலின்டேர்ஸ் பல்கலைக்கழகத்தையும், தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தையும் நாம் பிரதிநிதிப்படுத்துகிறோம்.
* அயின்ஸ்பெரி கல்லூரியின் SAIBT/ மன்றா கற்கைத் திட்டம், மற்றும் TAFE,ன் அட்லெயிட் நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக பல்கலைக்கழகத்திற்கான வழியை நாம் காட்டுகின்றோம்.

2003 பெப்ரவரிக்கான மாணவர்களின் தெரிவுவரை அவுஸ்திரேலியாவுக்கான மாணவ விசாக்கள் வழங்கல் தளர்த்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:-
திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா
சுகந்தம் வன்னியசிங்கம்வீதி
இணுவில் தெற்கு, சுண்ணாகம் 070 - 212641
கிழமை நாள்கள் - மாலை 5.00 - 9.00
வார இறுதி நாள்கள் - காலை 8.00 - மாலை 9.00

edlocate
EDUCATION AUSTRALIA

எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
23/1, ரொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 670748, 074 - 618718 .·.பக்ஸ்: 074 - 790957
ஈமெயில்: marketinge@edlocate.lk வெப்சைட்: www.edlocate.lk

தற்கொலைத் தாக்குதலைச் சமாளிக்க

# இலங்கையிடம் பிரிட்டன் ஆலோசனை பெறத் திட்டம்

கொழும்பு,செப்.11

தற்கொலைத் தாக்குதல்களைச் சமாளிப்பது குறித்து இலங்கையிடம் பிரிட்டன் ஆலோசனை கேட்டுள்ளதாக 'கார்டியன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஷ் பாதுகாப்புத் துறைப் பணியாளர்கள் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் -

இந்த விடயம் குறித்து இஸ்ரேலுடனும் அவர்கள் ஆலோசிக்கவுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்படும் தற்கொலைத் தாக்குதல்களை எதிர்கொள்வது மற்றும் அவற்றைத் தடுக்க முன் நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவற்றில் இலங்கை மற்றும் இஸ்ரேலிய பாதுகாப்புத்துறையினருக்கு பிரிட்டனை விட அதிக அனுபவம் இருக்கிறது. இதனாலேயே அந்த இரு நாடுகளிடமும் ஆலோசனை பெற பிரிட்டிஷ் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக பிரிட்டிஷ் அதிகாரிகள் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தை முறியடிக்கும் போர் நடவடிக்கைகளில் பிரதான பங்குவகிக்கும் பிரிட்டன், இலங்கையிடம் ஆலோசனை பெறுவது குறித்து பிரிட்டனில் ஆச்சரியம் எழுந்துள்ளது - என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## 'சண்டே லீடர்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பினரும் பிணக்கை சமரசமாகத் தீர்த்துக் கொள்ள முன்வந்துள்ளனர் என இரு தரப்பினதும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

லசந்த விக்கிரமதுங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இந்த மனுவில், தனக்கு இரண்டு கோடி ரூபா நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமெனக் கேட்டிருந்தார்.

குறிப்பிட்ட செய்தியில் லசந்த விக்கிமதுங்கவைக் குற்றம் காண்பதற்கு எவ்வித அடிப்படைக்காரணமும் இல்லையென 'லேக் ஹவுஸ்' நிறுவனம் ஒப்புக்கொண்டது. அதற்காக ஆழ்ந்த கவலை தெரிவிப்பதுடன் 10 லட்சம் ரூபாவை லசந்த விக்கிரமதுங்கவிற்கு வழங்குவதாகவும் அதனை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் 'லேக் ஹவுஸ்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

10 லட்சம் ரூபாவில் இரண்டு லட்சம் ரூபாவை வழக்குச் செலவாகவும் தலா நான்கு லட்சம் ரூபாவை இரண்டு தடவைகளிலும் வழங்க வேண்டுமென்று மாவட்ட நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

10 லட்சம் ரூபாவில் நான்கு லட்சம் ரூபாவை தாம் குறிப்பிடும் சமூக நிறுவனமொன்றுக்கு வழங்க வேண்டுமென லசந்த விக்கிரமதுங்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமெஸ் டி சில்வா, சட்டத்தரணி பாலித குமாரசிங்க ஆகியோர் சட்டத்தரணி ஜி.ஜி. அருள் பிரகாசத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் சார்பில் சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா, சட்டத்தரணி அன்னா விக்கிரமசிங்கவின் அனுசரணையுடன் ஆஜரானார். (ஐ)

## எதிரணி எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு உறுதி வழங்கியது. எனவே, அந்தப் பதவிக் குரியவரின் அதிகாரங்களைக் குறைப்பது சம்பந்தமான யோசனைக்கு அந்தக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது.

19ஆவது திருத்தத்தின் மூலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 'தேசிய முன்னுரிமைக் குழு'வின் அங்கத்தவராக - எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே- அரசுக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்ய எண்ணியுள்ளேன்.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொ.ஐ.முன்னணி எந்தத்தீர்மானத்தை எடுத்தாலும் சீர்திருத்தத்திற்கு நான் ஆதரவாக வாக்களிப்பேன். அதேவேளை, மக்களினால் தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தைப் பத்து ஆண்டுகளாக அதிகரிக்கவும் திருத்தம் ஒன்றைப் பிரேரிக்கவுள்ளேன் - என்றார்.

இதேவேளை, 19ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ள இருபது பொ.ஐ.முன்னணி எம்.பிக்களின் பெயர்களையும் அவர் வெளியிட்டிருப்பதாக ஒரு தகவல்தெரிவித்தது. (ஐ)

## மிருசுவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது.

"நாட்டில் யுத்தமில்லை; இராணுவ நடவடிக்கைகள், தாக்குதல்கள் இல்லை. அவசரகால விதிகள் கூட நடைமுறையில் இல்லை. இந்த நிலையில் மக்களின் காணிகளை எதேச்சாதிகாரமாக இவ்வாறு சுவீகரிப்பது சட்டமீறலாகும்." - என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார். (ஐ)

## இயக்கத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான். இருந்தும் எமது மக்களின் விடு தலைக்காக தன்னை அர்ப்பணித்து இறுதியில் கொடிய நோயினால் கேணல் மரணமானாலும் அவருடைய சாவு வீரச்சாவுதான். ஆரம்பகாலம் முதலே வெடிமருந்துகளுடன் பழகியதன் மூலம் அவனாக வலிந்து வாங்கிக்கொண்ட நோய்தான் அது. அதனால் அவன் வீரமரணத்தைத் தழுவியுள்ளான்- என்றார்.

யாழ்.இந்துக்கல்லூரி மாணவத் தலைவன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்தில் பலர் நினைவுரை ஆற்றினார்கள். (ஐ-8)

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புப் பின்னலையும் ஆளியையும் காலை 10 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து அங்கு இடம்பெறும் கூட்டத்திலும் அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார். இக்கூட்டத்தில் யாழ்.அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், மாநகர முதல்வர் மற்றும் ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-10-173)

## அகற்றப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களில் மொத்தம் 1,197 படையினர் இருந்தனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையின்படி 160 நாள்களுக்குள் 124 இராணுவ முகாம்கள் அகற்றப்படவிருந்தன. அவற்றில் 120 முகாம்கள் இதுவரை அகற்றப்பட்டு பொருத்தமான இடங்களில் மீள அமைக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த ஜூலைமாத இறுதியுடன் அரசாங்கம் 20 தடவைகளும் புலிகள் இயக்கம் 56 தடவைகளும் போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டிருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்திருக்கிறது.

- இவ்வாறு அமைச்சர் மாரப்பன மேலும் கூறினார்.

இந்தப் போர் நிறுத்த மீறல்கள் எந்தவகையில் நடைபெற்றிருக்கின்றன என்று விமல் வீரவன்ச எம்.பி. வினவிய பொழுது, அந்த மீறல்கள் எந்த வகையில் நடந்துள்ளன என்பது குறித்து கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று அமைச்சர் மாரப்பன பதிலளித்தார். (ஐ)

## தெஹிவளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருந்தார்.

சிலர் இவரிடம் கப்பம் கேட்டிருந்தனர் என்றும், அவர் கப்பம் கொடுக்க மறுத்திருந்தார் என்றும், தெஹிவளை இல்லத்தில் இருந்த பொழுது அவர் கொலை செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரவு 10 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற சிலர் அவரது பெயரைக் கேட்டுவிட்டு கத்தியால் குத்தினராம். தெஹிவளைப் பொலீஸார் இக்கொலை குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## கேணல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக இருந்தது.

இந்த அஞ்சலி நிகழ்வையொட்டி வர்த்தக நிறுவனங்கள், பொதுக் கட்டடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் சிவப்பு-மஞ்சள் நிறத்திலானகொடிகள் கட்டப்பட்டிருந்தன. சில இடங்களில் வாழைகள், தோரணங்கள் ஆகியனவும் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் ஓட்டோக்களிலும், வாகனங்களிலும் சிவப்பு-மஞ்சள் நிறத்திலான கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (ஐ-3-8-10-11-17-70-117-173)

## இராமேஸ்வர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ததை அடுத்து படகில் ஏறிக்கொண்டிருந்த ஏனையோரும் கண்டு பிடிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 10 ஆண்களும் 3பெண்களும் 3பிள்ளைகளும் அடங்குவர். இவர்கள் திருநெல்வேலி, பட்டுக்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் இருந்து வந்தவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

இந்த அகதிகளை சட்டவிரோதமாக இலங்கைக்கு அனுப்பவிருந்தவரையும் படகின் உரிமையாளரையும் பொலீஸார் தேடிவருகின்றனர்.(ஐ)

## தடைநீக்கத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைப் பத்திரத்தில் ஒரு வாரத்துக்குள் நான் கையெழுத்திட வேண்டும். அவ்வாறு நான் கையெழுத்திடும்வரை அது செல்லுபடியாகாது.

இதன்படி, புலிகள் இயக்கத் தடைநீக்கம் சட்டவிரோதமானதாகும். மக்களின் நன்மைக்காக அரசு இன்று வரை எந்தவோர் அமைச்சரவைப் பத்திரத்தையும் சமர்ப்பிக்கவில்லை - என்றார். (ஐ-12)


யாழ். மாவட்ட வாயு ஒட்டுநர்களுக்கு ஒரு நற்செய்தி

Ceylon Oxygen HYDRO GAS WELDERS

வாயு ஒட்டு வேலைகளுக்குப் பயன்படும் ஒட்சிசன், அசற்றலின் போன்ற வாயுக்களையும் அதற்கான உபகரணங்களையும் யாழ். மாவட்டத்தில் விநியோகிப்பதற்கான ஏக முகவர்களாக AMT TRANSPORT SERVICE ஆகிய எங்களை இலங்கை ஒட்சிசன் லிமிட்டெட் நியமித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

AMT TRANSPORT SERVICE

பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்தி, கோப்பாய், யாழ்ப்பாணம். T.P. - 077-686220. (7916)

NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி யாழ்.நகர்.

LOGIC

DAY Class

S.R.J.சுதன்

துரித வினா - விடை வகுப்புகள் புதன், வியாழன் (10.00a.m.) (8156)

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி.

நேரமாற்றம் A/L DAY CLASS.

பொருளியல்

S.வரதராஜன்.

வியாழன் (12.09.2002) வகுப்பு நடைபெறாது. வழமைபோல் செவ்வாய் (17.09.2002) காலை 8.00 மணிக்கு நடைபெறும். (8162)



நாடுபூராகவும் 24 மணி நேர சேவை

உங்களுடைய மிக முக்கிய ஆவணங்கள், சகலவிதமான பொதிகள் முதலியன ஏற்றுக்கொள்ளலும், விநியோகமும் உண்டு.

வேறு பிற தகவல்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

புரொன்டோ

லங்கா பிறைவேற் லிமிட்டெட், 217, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். T.P.: 021 - 2273. (7340)

தேவை

1. கணக்காளர் - ஆண்

25 - 40 வயதிற்குட்பட்டவர்கள் (முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

2. இரவுக் காவலாளி

சுய விபரங்களுடன் நேரில் வரவும்

சக்தி

ஓவ்செற் பிறின்ரேஸ்


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



## அமரர் சின்னப்பு தாமோதரம்பிள்ளை

தோற்றம் 11-01-1951

மறைவு 13-08-2002

பண்புக்கும் பாசத்துக்கும் இலக்கணமாய் அமைந்த தங்கள் அன்பு முகத்தை என்றும் மறவோம்!

*தங்களின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திப்போம்.*

13.08.2002இல் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று 11.09.2002 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குபற்றி அமரரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திப்புதுடன், மதியபோசனத்திலும் பங்குபற்றியேகுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பங்களா வீதி,*
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

பாசமிகு:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(8133)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.